# காப்புறுதி உலகம்

காலாண்டிதழ் ① தை – மாசி – பங்குனி 2006 விலை ரூ.50/-


வருமுன் காப்போம்
காப்புறுதி மூலம்



கடலுக்கோர் கடிதம்

## காப்புறுதிக் கோட்பாடுகள்

இலங்கைக் காப்புறுதிச் சபை

இவருக்கு நிகரில்லை

காப்புறுதிச் சட்டங்கள்





இலங்கையின் முதல் தேசிய தமிழ்க் காப்புறுதிச் சஞ்சிகை

"தங்கம் காப்புறுதியைப் போல நெருக்கடிகளின் போது கைகொடுத்துதவக்
கூடியது என்கிறார் உலக தங்க சங்கத்தின் ஆலோசகர்.
உங்கள் கடும் உழைப்பால் பெற்ற பணத்தை
காப்புறுதியிலும் தங்கத்திலும் சேமித்து
வளமாக வாழ எங்கள் வாழ்த்துக்கள்."




# ஸ்ரீ லேகா ஜுவலர்ஸ்

**55, 57, யட்டிநுவர வீதி, கண்டி**
**தொலைபேசி: 081- 222 9105**
**தொலை நகல்: 081-220 2925**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி உலகம்

காலாண்டிதழ் ① தை - மாசி - பங்குனி 2006 விலை:ரூபா50/=


**கௌரவ ஆசிரியர் -**
மு. கணபதிப்பிள்ளை
எவ்.சீ.எம்.ஏ, ஈ.டீ.பீ.ஏ.
ஆலோசகர் - இலங்கைக்
காப்புறுதிச் சபை.

**ஆசிரியர்:**
க. கோபாலசங்கர்,
கலை, சட்டப் பட்டதாரி,
ஊடகவியல் உயர்தகைமை,
முன்னாள் பிராந்திய முகாமையாளர்
(இ.கா.கூ), சட்டத்தரணி.

**பிரசுர ஆலோசகர்:**
த. சிவசுப்பிரமணியம்

**அட்டை மற்றும் பக்க வடிவமைப்பு:**
க. மயூரன்,
கனவு நிலையம், கொழும்பு - 06.
✆: 077 3013046

**கணனி** - செல்வி த. மைதிலி,
இ. சிவா

**அச்சீட்டோர் -**
வக்மி அச்சகம் - 011-2421987

**வெளியீடு -** சூரிய சக்தி வாழ்வாதார
அறிவொளி நிலையம், 30ஏ, பெரேரா
ஒழுங்கை, கொழும்பு - 06.
✆: 0114 902 609

**KAAPPURUTHI ULAGAM**
**(Insurance World)**

**Honorary Editor :**
M. Kanapathippillai F.C.MA,E.D.B.A
Consultant
Insurance Board of Sri Lanka

**Editor :**
K. Gopalasankar, B.A., LL.B, Dip.in Journalism, Ex. Regional Manager (S.L.I.C)
Attorney-at-Law.

**Publishing Consultant :**
T.Supramaniam

**Cover & Page Design:**
K. Maiyuran, Dream Station,
Co.06 ✆: 077 3013046

**Typesetting:** Miss.T. Mythily, R.Siva.

**Printed by:**
Vakmee Printer -011 2421987

**Publishing:** Souriyasakthi Livelihood Knowledge Centre 30A, Pereira Lane, Colombo - 06, Sri Lanka. ✆: 0114902609


**உள்ளே............**


1. தமிழ்த்தாய் வணக்கம்
2. எங்கள் நோக்கு
3. அனர்த்தங்கள்:
   - பத்திரிகைச் செய்திகள்
   - கடலுக்கோர் கடிதம் (கவிதை)
4. வருமுன் காப்போம்:
   - வருமுன் காப்போம்
   - "சாரத்தியம்" நூல் விமர்சனம்
5. காப்புறுதி:
   - காப்புறுதி என்றால் என்ன? (கலந்துரையாடல்)
   - மூக்குக்குக் காப்புறுதி (கவிதை)
   - ஆயுட் காப்புறுதி
   - காப்புறுதிக் கோட்பாடுகள்
   - காப்புறுதிச் சட்டங்கள் (பேட்டி)
   - சொல்லகராதி
   - இலங்கையின் புதிய காப்புறுதிச் சட்டவாக்கம் + காப்புறுதிச்சபை
6. காப்புறுதி நிறுவனங்கள்:
   - இன்றைய இலங்கையின் காப்புறுதி நிறுவனங்கள், அமைப்புக்கள்.
   - காப்புறுதி நிறுவனங்கள், அமைப்புகளுக்கான வேண்டுகோள்
7. காப்புறுதி இடையேற்பாட்டாளர்கள்
   - இவருக்கு நிகரில்லை (பேட்டி)
   - காப்புறுதித்துறையினர் அறிமுகம்
8. காப்புறுதிப் பத்திரதாரர்கள்:
   - காப்புறுதியில் உங்கள் பிரச்சினை.
9. மாணவர்கள்:
   - க.பொ.த. (உ.த) வினாவிடை 1. கேள்வி - பதில்
   - மாணவர் பொதுஅறிவுப்போட்டி.
10. பொதுமக்கள்:
    - வாசகர் பார்வை
    - கைகொடுக்கும் காப்புறுதி (கவிதை)
    - இவர்கள் என்ன கூறுகின்றார்கள்
    - காப்புறுதிப் பரிசுப் போட்டி
    - கட்டுரைப்போட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தாய் வணக்கம்

கன்னித் தமிழே;
சென்னித் தமிழே;
உன்னைத் தமிழே;
உன்னில் தமிழே;
உன்னிப்பார்க்கின்றேன்;
சென்னி தாழ்த்துகின்றேன்.
-கோ.



## எங்கள் நோக்கு

# காப்புறுதி உலகம்

மனித வாழ்வுடன் விளையாடும் அனர்த்தங்களோ பல. இவற்றை இயற்கை அனர்த்தங்கள், மானிட அனர்த்தங்கள் என இரு பெரும் வகையாக வகுப்பர் அனர்த்தங்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்ட அறிஞர்கள். அண்மைய ஆழ்கடற் பேரலை (சுனாமி) அனர்த்தம் இன்று உலகின் மக்கள் பலரையும் விழிப்படைய வைத்துள்ளமையைக் காணலாம். ஆழிப்பேரலை வடுக்கள் இன்னும் ஆறாத நிலையில்... இவ் எதிர்பாராத அனர்த்தங்களின் பாதிப்பிலிருந்தும் நாம் நம் வாழ்வைக் கட்டியெழுப்ப காப்புறுதி உலகின் துணையையும் நாடுவது வளமாக வாழ விரும்பும்யாவர்க்கும் பயன் தருவதாகும்.

அரசியல் உலகம்; ஆன்மீக உலகம்; இலக்கிய உலகம்; கணனி உலகம்; வர்த்தக உலகம்; விளையாட்டு உலகம்-இப்படியெல்லாம் பல்வேறுபட்ட உலகங்கள் பற்றியெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் காப்புறுதி உலகம் என்று ஒன்று இருக்கிறதே. இதுபற்றித் தெரிந்து வைத்திருப்பவர்கள் எம்மில் எத்தனைபேர்? ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்! ஒருபுறம் காப்புறுதி வழங்கும் நிறுவனங்கள். மறுபுறம் இவற்றிடமிருந்து காப்புறுதிகளைப் பெறுபவர்கள், இவ்விரு பகுதியினரிடையே காப்புறுதி செய்வோரை சேர்க்கும் உயர்ந்த சேவையில் ஈடுபட்டுள்ள காப்புறுதி முகவர்கள்-அமைப்பாளர்கள்-விற்பனைப் பிரதிநிதிகள்-தரகுநிறுவனங்கள் எனும் இடையேற்பாட்டாளர்கள்; இக்காப்புறுதிகளால் பயனடையும் ஏனையோர்; இவற்றையெல்லாம் தாங்கிநிற்கும் நாடு; காப்புறுதி நிறுவனத்திற்கு மறு காப்புறுதிகளை வழங்கும் மறுகாப்புறுதி நிறுவனங்கள்; இவற்றையெல்லாம் ஒரு சேரக் கொண்டதே இக்காப்புறுதி உலகம்.

இக்காப்புறுதி உலகத்தைச் சேர்ந்தவர்கள் யாவருக்கும் ஒருவகை 'மனநிம்மதி' உண்டு. ஆம், காப்புறுதித் தொழிலை நடாத்துவதன் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்கட்கும் பெரும் பணிபுரிவதனால் ஏற்படும் மனநிம்மதியோ காப்புறுதி நிறுவனங்கட்கு. உயர்ந்ததோர் சமூக சேவையில் ஈடுபட்டுள்ளோமே எனும் மனநிறைவு காப்புறுதி முகவர்கள், அமைப்பாளர்களுக்கு. தமது உடல், உயிர், உடைமைகள் அனைத்தையுமே காப்புறுதி செய்துவிட்டதால் எதிர்பாராமல் நிகழக்கூடிய எத்தகைய அழிவையோ சேதத்தையோ பற்றி அதிகம் கவலைப்படாத ஒருவித மனநிம்மதி தமது உடல், உயிர், உடைமைகள் யாவற்றையுமே காப்புறுதி செய்தவர்கட்கு. இத்தகைய மனநிம்மதிகள் பலவைப் பெற்றுத்தரும் காப்புறுதியின் வரலாறு மிகவும் நீண்டது. இதன் தன்மை சேவையடிப்படையிலானது. இதன் நன்மைகளோ விரிவானவை. இதன் மூலம் ஒருவர் தன் பொருட்களைப் பெருக்கலாம்; பாதுகாக்கலாம்; வாழ்க்கையை வளப்படுத்தலாம்; எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகட்கு பணரீதியான நட்டஈட்டைப் பெற்று முன்னர் போல வாழ்க்கையை நிம்மதியாகத் தொடரலாம்.

கடந்த கால வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவத்தின்வழி எதிர்காலத்தில் வளமாக வாழ வகுக்கப்பட்டதோர் உன்னதமான வழிமுறையே இக்காப்புறுதி முறை. எனவே, இக்காப்புறுதி முறையின் தன்மையை – நன்மையை - போக்கை உங்கட்கு படம்பிடித்துக் காட்டுவதே எங்கள் நோக்கு. எனவே காப்புறுதி, அதன் வரலாறு, காப்புறுதி நிறுவனங்கள், அவற்றின் காப்புறுதித் திட்டங்கள், அவற்றால் கிடைக்கும் பயன்கள், அவற்றை அனுபவிக்கும் வழிமுறைகள், பயன்பெறுவோர் என்பன பற்றியும் யாவருக்கும் விளக்கும் வகையில் எடுத்துக்கூறும் இக் காப்புறுதி உலகம் எனும் சஞ்சிகையை உங்கள் கரங்களில் தவழவிட முன்வந்துள்ளோம்.

***********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்கள்

## பத்திரிகைச் செய்திகள்

அனர்த்தங்கள் இயற்கை அனர்த்தங்கள், மனித அனர்த்தங்கள் என இருவகைப்படும். மனித அனர்த்தங்கள் மனிதரால் ஏற்படுத்தப்படுபவை. இயற்கை அனர்த்தங்கள் இயற்கையால் ஏற்படுத்தப்படுபவை. எரிமலை, புயல், சூறாவளி, வறட்சி, கடும்மழை, பனிமழை, வெள்ளம், மண்சரிவு, பூகம்பம், ஆழிப்பேரலை (சுனாமி), காட்டுத் தீ என இயற்கை அனர்த்தங்களை [illegible] எனக் கூறலாம். இவற்றால் பல இலட்சக்கணக்கான மக்கள் [illegible] பொருட்கள் அழிவுற்றுள்ளன. இதனை 'இயற்கை அனர்த்தங்கள்' காரணமாக ஒரு நாட்டின் சூழல் மாசடைவதுடன் பொருளாதார பாதிப்புகளும் ஏற்படுகின்றன. உலகில் வருடாந்தம் 60,700 இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. 80,000 பேர் வரை மரணிக்கின்றனர். 1000 இலட்சம் மக்கள் பாதிப்படைகின்றனர். 3000 இலட்சம் டொலர் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைகின்றன. 2003ல் மட்டும் உலகில் 700 இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்று 50,000 பேர் மரணித்தனர். 6000 இலட்சம் டொலர் [illegible] என்று தேசிய இயற்கை அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் திரு [illegible] குறிப்பிடுகின்றார். உலகின் பல பாகங்களிலும் தொடர்ந்தும் மக்கள் சமுதாயத்திற்கு அனர்த்தங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இயற்கை அனர்த்தங்களால் மக்கள் [illegible] அனர்த்தங்கள் பற்றிய பத்திரிகை செய்திகளை இங்கே தருகின்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கோர் கடிதம்


அவுஸ்திரேலியா மெல்பேர்னிலிருந்து மட்டுநகர் மணிராஜ்

தாய் சேய் உறவும்
சகோதர பிணைப்பும்
சதி பதி இணைவும்
சமுதாய அமைப்பும் - உன்
பாசம் கண்களுக்குப்
பார்க்கப் பொறுக்கலையோ
தாயாக உனைக் கொண்டோம்
மகனாக அலை கண்டோம்
பேயாக வந்தெமை
பெரும் பலி கொண்டாயே!
ஓயாது உழைத்து
ஓடம் சேர்ந்து
தேடிய செல்வமெலாம் - ஓர்
நொடிப்பொழுதிலே
பாழ் அடித்துவிட்டாயே
மடி பாவி 'சுனாமி' - நீ
ஆழிப் பேரலையே - நீ
அடி முடித்து விட்டு

அமைதி பூசி விட்டாய் - எமை
நாடித் துடிப் பின்றி
நடைப் பிணமாக்கிவிட்டு
விண் மீன்களெல்லாம்
தன் பாட்டில் உலாவர
கவர்ச்சிகளைக் கடந்து
விண்வெளி வாழும்
புல்பூடு செடியா
பனையுடன் இருக்க
சூரிய சந்திரரும் - தம்
கடமைத்தொழில் புரிய
வான பூமி காற்றும்
வெளி மண்டலமும்
தானுண்டு தன் கடமையுண்டென்று
ஆற்றும் கடமையை
அவரோடு செய்ய
நீ மட்டும் ஏன் - தக்க
தருணம் பார்த்திருந்தாயோ

எழுந்து தலை விரித்து
தாண்டவ மாடி
இயற்கையின் நியதியை
இதுவென்று காட்ட
நாங்களெல்லாம் உனக்கு
பிள்ளைக் கிரையாய் விளை நதோ?

வாழும் போது
கல் மலை முகடும்
பனி படர் நிலமும்
பரந்து விரிந்த பாலை நிலங்களும்
உடல் இளைப் தானே
அங்கே வாழ்ந்திருக்கலாம் தானே
உன் கை வரிசையை
ஏனோ தானோ என்று
பாரபட்சம் இருந்திருப்போமோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமென்றால் உனை
பாராட்டியும் இருப்போம்
பாவம்,
அப்பாவி மக்கள் நாம்
எப் பாவம் செய்தோம் -
எம்மீதா உன் திருவிளையாடல்
அகல வாய் விரித்து - எமை
அப்படியே ஆட்கொண்டாயே
உலகுதான் பொறுக்குமா
உனக்கிது நியாயமா?

பார்க்கப் பரந்திருந்தாய்
பாயாக விரிந்திருந்தாய்
பதமாக அலையடித்து
இதமாக சுவாசிக்க
இயற்கைக் காற்றை
வளைத்துத் தந்தாய்
உன்னில் உடல் நனைத்து
உள்ளூர சுகம் கொள்ள
எம்மில் அன்பு கொண்டு
உள்வாங்கி தடவி உபசரித்தாய்
உன் மேல் எம்மை
உலவ விட்டு தாலாட்டினாய்
ஊர் ஊராய் பயணிக்கவும்
உடைமைகளை நகர்த்தவும்
ஊழ் வினையால் நாம்
ஒருவரோ டொருவர் முரண்பட்டு
உன் மடிமீது களமமைத்து
சண்டையிட்ட போதெல்லாம்
தப்பு செய்தோ மென்று
ஒப்பாரி வைக்காமல்
கட்டியணைத்துக்கைகொடுத்துதவினாய்

உன் மடிச் செல்வம் மீனினத்தை
புசிக்க உணவாகவும்
உனையே காய்ச்சி நாம்
ருசிக்க உப்பாகவும்
உயர்ந் தெழுந்து ஆவியாகி
உயர் நிலங்கள் செழிப்பாக
நிலமிடையே மழையாக
நன் நீரை தந்தும் நீ
நின் அடிவயிற்று நிலத்துக்கடி
பெற்றோலியம்
நல் முத்து திரவியங்கள்
நானா வித கனிப்பொருட்கள்
அவையாவும் அளவின்றி நாம்
பெற்றுக் கொண்ட போதெல்லாம்

தாய் சேய் உறவைக் காட்டி
அள்ள அள்ள அன்பைக்
கொட்டினாய்
உணவு நீர் தந்து
உயிர் வாழச் செய்த நீ
உலோகம் பெற்றோலியம் தந்து
உயரச் செய்த நீ
கனிப் பொருள் திரவியம் தந்து
அழகுறச் செய்த நீ
உன் மடிமீது உலாவரும்
போதெல்லாம்
தடவித் தாலாட்டிய நீ
உயிர் வாழ ஆதார ஒட்சிசனை
தந்து
உயிர்ப் பிக்கும் நீ
நன்னீரைத் தந்து நானிலமும்
செழிப்பாக்கி பூமியை
பொன் கொழிக்கச் செய்த நீ

கச்சிதமாக கணப் பொழுதில்
துச்சமாக எமை எண்ணி - உயிர்ப்
பிச்சை கேட்கக் கூட
இடம் கொடாமல் -உன்
இச்சையை தீர்த்துக் கொண்டாய்
எமனாக மாறி விட்டாய்
வாரி அள்ளிக்கொண்டு
வழமைக்கு திரும்பிய நீ - சிலரை
சோர விட்டது மேன்
துன்பத்தை வளர்ப்பதற்கோ
பாரினில் இது போன்று
பாதகச் செயலு முண்டோ
அங்கொன்று இங்கொன்றாக
அனாதையாக்கி விட்டாயே
துப்பரவாக சுருட்டி
எடுத்திருக்கலாம் -அன்றேல்
தொடாமலே விட்டிருக்கலாம்
சூறைக் காற்றைக் கண்டோம்
சூறாவளிப் புயலைக் கண்டோம்
பேரிரைச்சலோடு வரும் கனத்த
மழை
இடிமின்னல் பெருவெள்ளம்
கண்டோம்
போரினால் வரும் பொருட்சேதம்
உயிர் இழப்பு பெரும் நஷ்டம்
கண்டோம் - ஆனாலும்
பாரினில் 'சுனாமி' உனைப்போல
பயங்கரம் என்றும் கண்டதில்லை.

தேரூர்ந்த தெருவெல்லாம்
சிதைந்த உடல் பிணக்காடாய்
காரூர்ந்த பாதையெல்லாம்
காணாமல் மறைவாகி
பேரான மனைகளுடன்
பெருவாரி கட்டடமும்
ஆராதனை செய்யும்
அத்தனை இறைதளமும்
போர் வீரர் களமெல்லாம்
புதையுண்ட கதையாகி
ஊரெல்லாம் தாரைவார்த்து
உனக்கே தந்தது போல்
வேரோடு சாய்த்து விட்டாய்
வேறு என்ன மிச்சமுண்டு
மாறாது உன் வடு
மனிதகுலம் நிலைக்கும் வரை
போராட நீயுமா
புறப்பட்டாய் எம்மோடு
என் செய்வோம் இயற்கையே?

நீ இல்லையேல் -
உனைவிடப் பெரியவர்கள்
நான் மேற்கூறிய விண்ணவர்கள்
சூரிய சந்திர வான் வளி மண்டல
சுயதொழில் செய்வோர்
இல்லையேல்
குறுகிய காலம் வாழும் நாம்
வாழ்ந்திருக்கவே மாட்டோம்
ஆனாலும்,
ஒன்றுமட்டும் உண்மை
காலம் வரும் முன்னே
காலனாய் வந்துவிட்டாய்
கலக்கி விட்டாய்
கதையை முடித்துவிட்டாய்
பரவாயில்லை.
மறு வாழ்வு ஒன்று உண்டு எமக்கு
- அது
நித்திய வாழ்வு நிரந்தர வாழ்வு
அங்கே இருப்பவர் பெரியவர்
உன்னையெல்லாம் ஆக்கியவர்
ஆட்டிப் படைப்பவர்
அவரோடு நாம் இருப்போம் -
எம்மை
உம்மால் ஒன்றும் செய்யமுடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமுன் காப்போம்

மனிதராக பிறந்த நாம் இப் பூவுலகில் வாழ்வதோ குறிப்பிட்ட ஒரு கால எல்லை வரைக்காகும். எனவே இக்காலத்துள் சிறப்பாக - பாதுகாப்பாக வாழ்வது எமக்கும் நல்லது, பிறருக்கும் நல்லது. கடந்தகால வரலாறுகள் இயற்கை மற்றும் மானிட அனர்த்தங்கள் பற்றியும் அவற்றால் ஏற்பட்ட மனித அழிவுகளையும் அவலங்களையும் கூறி நிற்கின்றன. இவற்றின்படி யாருக்கும் எப்பொழுதும் என்னென்ன எப்படியெப்படி எல்லாம் நடக்கும் என்று தெரியாது. எல்லா வற்றையும் ஆண்டவன் தலைமேல் போட்டுவிட்டு வாழும் மனோபக்குவம் எம்மில் பலருக்குண்டு. எனினும் இது போதாது. இவ் அனர்த்தங்கள் அனைத்தும் ஏன் ஏற்படுகின்றன என்று சிந்தித்து செயற்பட்டால் நாம் இவ்வனர்த்தங்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். உலகில் இவ் வனர்த்தங்கள் பலவற்றால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பல நாடுகள் சிந்தித்து செயற்பட்டதால் ஓரளவுக்கேனும் பாதுகாப்பாக வாழமுடிகிறது. எனவே இத்தகைய அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கக் கடந்த பல நூற்றாண்டுகாலமாக ஆளாகத் தொடங்கி விட்ட நாம் பாதுகாப்பாக வாழ என்ன செய்தல் வேண்டும் என்பது பற்றி நன்கு சிந்தித்துச் செயற்படல் வேண்டும். அதிகாரம் உள்ளவர்கள் அனர்த்தங்களினின்றும் பாதுகாப்புப் பெற முதலில் நில ஆய்வை மேற்கொள்ள வேண்டும். இவ்வாய்வின் போது நிலங்களிலிருந்து எவ்விடயங்களில் அதிஉச்ச பயன்பாட்டைப் பெறலாம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். எல்லா விடயங்களிலும் பாதுகாப்பே முக்கியமானது.

ஆழிப்பேரலைத் தாக்கத்தினின்றும் பாதுகாக்க கடற் கரையோரத்தில் பாரிய செங்கற்கள் கொண்டு "ஆழிப்பேரலை அணை" ("சுனாமி அணை") என்ற பெயரில் அணை கட்டப்படல் வேண்டும். அடுத்து கரையோர நிலங்களில் வளரக் கூடிய இயற்கை அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கக் கூடியதான மரத் தோப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். இது தொடர்பில் தாவரவியல் நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்படல் வேண்டும். அடுத்து கரையோரப் பாதைகள் கடற்கரையில் இருந்து நியாமானளவு தூரத்தில் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்படல் வேண்டும். நாட்டின் உட்புறப் பகுதிக்கு கரையோர பிரதேசங்களில் குறுகிய காலத்துள் சென்றடையக் கூடியதாக பாதைகள் அமைக்கப் படல் வேண்டும். மேலும் குறிப்பிட்ட ளவு தூரத்துக்கிடையே விளையாட்டு இடங்கள், பூங்காக்கள் அமைக் கப்பட்டு அவற்றூடே மக்கள் தொடர்பு நிலையங்களும் அமைக் கப்பட்டு தொடர்புசாதனங்கள் மூலம் பாதுகாப்பு முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் பற்றி பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். கடலையண்டிய பகுதி களில் மேலே குறிப்பிட்ட வற்றுக்கான நிலம் தவிர்ந்த நாட்டின் உட்புறம் நோக்கிய வீடமைப்புக்கு தகுந்த இடங்களில் வீடுகள் வட்ட வடிவில் அமைக்கப் படுவது பாதுகாப்பானதாகும். வட்ட வடிவில் அமைவதால் இயற்கை அனர்த்தங்களின்போது எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் சக்தி உண்டாகும். மேலும் வீட்டுக் கூரையானது சூரிய ஒளிக் காலங்களில் சூரிய சக்தியையும் மழைக்காலங்களில் மழை நீரையும் பெற்றுச் சேமிக்கும் வகையில் அமைக்கப்படல் பல நன்மைகளைப் பெற வழிவகுக்கும்.

எனவே கரையோரப் பகுதிகளில் இயற்கை அனர்த்தப் பாதுகாப்பு, வீடமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இதுவரை மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டிருக்காத விடத்து, இவற்றில் உரிய கவனம் செலுத்துவது மனித பாதுகாப்புக்கு மிகமிக அவசியமாகும்.




8ம் பக்கம் பார்க்க......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விமர்சனம்

# 'சாரத்தியம்'

# அவதானிப்புகளும் பதிவுகளும்



த. சிவா

'சாரத்தியம் - சவால்களும் சாமர்த்தியமும்' என்னும் பயன்மிக்க நூலை காலத்தின் தேவை கருதி பல பிரயத்தனங்களுக்கு மத்தியிலும் வெளிக்கொணர்ந்துள்ளார் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. பேரின்பநாயகம் அவர்கள்.

போக்குவரத்துத்துறைப் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும், வீதிப் பாதுகாப்புக்கான தேசிய பேரவை, இலங்கை விபத்துத் தடுப்புச் சங்கம் என்பவற்றின் தலைவராகவும் இருந்து தனது அனுபவத்தின்பால் நின்று 'தான்பெற்ற அனுபவம் பெறுக இவ்வையகம்' என்ற நல்நோக்குடன் சாரத்தியம் என்னும் பெறுமதிமிக்க இந்நூலை ஆசிரியர் யாத்துத் தந்துள்ளார். தமிழ்மொழியில் இத்தகைய நூல்கள் இல்லாத குறையை இந்நூல் ஓரளவு தீர்த்து வைத்த பெருமை நூலாசிரியரைச் சாரும்.

இந்நூலின் 'முன்னுரை'யில் இக்கைந்நூலானது பாதுகாப்பாக மோட்டார் வாகன ஓட்டுநராக இருப்பதற்கு உங்களுக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது எனப் பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். அது உங்களுடைய பாதுகாப்பான மோட்டார் வாகனச் சாரதியத்தின் தொழில் நுணுக்கங்கள் மற்றும் நீங்கள் வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது எதிர்நோக்க வேண்டியுள்ள பல்வேறு அபாயகர நிலைமைகளை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளை வழங்குகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கற்பாலது.

இக்கைந்நூலானது வீதிப் பாதுகாப்பு, விபத்துத் தடுப்பு, அவதானம் போன்ற செயற்பாடுகளில் முகாமைத்துவத்துறையில் பெற்ற நீண்டதும் பரந்ததும் ஆழமானதுமான அனுபவத்தின் அடிப்படையில் ஆக்கப்பட்டுள்ளது என்றும் பெறுமதியான உள்ளடக்கமும், ஆராய்ச்சியும், ஆழ்ந்த சிந்தனையும் உட்படுத்தப்பட்டுள்ளன என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஜீ. பி. எஸ். த. சில்வா கூறிய கூற்றுக்கள் மனங்கொள்ளத்தக்கவை.




இலங்கையில் ஒவ்வொரு மட்டு நிமிடத்திலும் ஒரு வீதி விபத்து ஏற்படுவதாகவும் இதன் மூலம் ஆண்டு நாட்களுக்கு ஓர் உயிர்வீதம் பறிக்கப்படுவதாகவும் ஆண்டுதோறும் ரூபா கோடிக்கணக்கில் சொத்துக்கள் சேதப்படுத்தப்படுவதாகவும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.



இந்நிலையில் பாதுகாப்பான வாகனம் செலுத்துவது தொடர்பான கைந்நூல் ஒன்றின் வெளியீடானது நீண்ட கால தேவையொன்றை நிறைவேற்றுவதாகும். இக்கைந்நூல் பாதுகாப்பாக மோட்டார் வாகனம் செலுத்துவதற்கு வேண்டிய அடிப்படைத் தகவல்களை இலகுவான மொழிநடையில் தருகின்றது. ஆசிரியர் இந்நூலை எளிதாக வாசிப்பதற்கேற்ற முறையில் தேவையான விளக்கப்படங்களுடன் ஆக்கியிருக்கின்றார். சாரதிகள் செய்யக்கூடாதவற்றைக் காட்டும் படங்கள் மிகவும் பிரயோசனம் மிக்கவையாகும். இக்கைந்நூலில் சீரற்ற கால நிலைகளில் வாகனம் செலுத்துதல், பாதுகாப்பு முற்காப்புகள், துணைப் பொருட்களின் உபயோகம், அவசர கால நடைமுறைகள், விபத்துக்கள், வாகனம் செலுத்துவதற்குரிய உதவும் குறிப்புக்கள், மது போதையில் வாகனம் செலுத்துதல், எரிபொருள் பாவனை போன்ற பல தலைப்புகளின் கீழ் பல தகவல்கள் தரப்பட்டுள்ளன.

இலங்கையின் அடர்த்தி நிறைந்த பெரு வீதிகளில் வாகனம் செலுத்தும்போதும் ஒவ்வொருவரும் கட்டாயமாக இக்கைந்நூலை வாசிக்க வேண்டும். இந்நூலை சரியாக வாசித்து விளங்கிக் கொண்டால் எண்ணிலா உயிர்களையும் சொத்துக்களையும் காப்பாற்றுவதோடு பெருமளவு பல விபத்துக்களையும் தடுக்க முடியும். விபத்துக்கள் எந்த நேரத்திலும் ஏற்படலாம். எனவே கை கொடுத்து உதவவல்ல இக்கைந்நூலிலுள்ள தகவல்கள் முற்பாதுகாப்புக்கு உதவும் என்று மொழிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப் பல்கலைக்கழகத் தலைவர் பேராசிரியர் சமந்த எம். விஜயசேகர தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். இங்கே "வருமுன் காப்போம்" என்ற சொற்பொருள் தொனிப்பதை அவதானிக்க முடிகின்றது.

நூலாசிரியர் தனது உரையில், "..... நீங்கள் பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவதற்குத் தேவையான அறிவையும் அடிப்படைத் தகவல்களையும் வழங்குவதே இந்நூலின் நோக்கமாகும். அதுபோல், கவனம், பொறுப்புணர்வு போன்றவை வாகனம் ஓட்டுவதற்கு மிகவும் முக்கியமானவையாகும். பாதுகாப்பாக வாகனம் செலுத்துவதில் ஏற்படக் கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான அறிவுறுத்தல்களையும் சொல்லி நிற்கின்றது. பாதுகாப்பாக வாகனம் செலுத்துவதால் விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் செலவுகள் குறையும். இது நாட்டின் பொருளாதாரத்திலும், மக்களின் நிதி நிலைமை, இலாபம் ஆகியவற்றிலும் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும். பொறுப்பில்லாமல் வாகனம் செலுத்துவதானது சூழல் மாசடைதல், எரிபொருள் விரயம், வாகனப் பழுது முதலியவற்றையும் ஏற்படுத்தும் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். பாதசாரிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பெரும் நன்மையாக அமையுமென நம்புகிறேன்". என்று தெளிவுபடுத்தியுள்ளார்.


அவருடைய நல்நோக்கும் பெருந்தன்மையும் இதன் மூலம் புலப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நூலின் பொருளடக்கத்தைப் பொறுத்தவரையில் பத்துத் தலைப்புகளுக்குக் கீழ் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

01) சீரற்ற காலநிலை மற்றும் சீரற்ற வீதிநிலைமைகள்.
02) பாதுகாப்பு முற்பாடுகள்.
03) துணை உபகரணங்களைப் பயன்படுத்தும்முறை.
04) அவசரகால நடைமுறைகள்.
05) விபத்துக்கள்
06) வாகனம் செலுத்துவதற்கு உதவும் குறிப்புகள்
07) மதுபானமும் அதன் விளைவு களும்
08) எரிபொருள் நுகர்ச்சி பற்றிய வழிகாட்டல்
09) அவசரகால முதலுதவி
10) வீதி மற்றும் வாகன விபத்துக் களால் ஏற்படும் நட்டச் செலவு.

மேலே கூறப்பட்ட விடயங்களை அவதானத்துடன் கற்றுக் கொள்வதன் மூலம் சவால்களைச் சமாளிக்க முடியும். படங்களுடன் பல வகையான விடயங்களையும் இந் நூல் கொண்டுள்ளது. மற்றும் வீதிச் சைகைகளும், வீதி குறியீடுகளும் அத்துடன் போக்குவரத்துக்கான ஒளிச் சமிக்ஞைகளும் மற்றும் குறியீடுகள் மூலம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.

பல விருதுகளையும் பாராட்டுக் களையும் பெற்ற இந்நூலாசிரியர் வெளிநாடுகளுக்குச் சென்று வீதிப் பாதுகாப்பு, போக்குவரத்து தொழில் நுட்பவியல், போக்குவரத்து நிர்வாகம் சாரதிகள் பயிற்சி முறைகளும் போன்ற விடயங்கள் தொடர்பான சர்வதேச மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு கட்டுரைகளும் சமர்ப்பித்துள்ளார். மும்மொழிகளிலும் இந்நூல் வெளிவந்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். பெரியார் திரு. த. பெரின் நாயகம் அவர்களின் பெருந் தன்மையால் இச்சேவை இலங்கை வாழ் மக்கள் எல்லோரினாலும் போற்றுதலுக்கு உள்ளாகும் என்பது திண்ணம்.



சுனாமி முன் எச்சரிக்கை அமைப்பு

Editor :
Insurance world
36A, Pereira Lane,
Colombo -06, Sri Lanka.

ஆசிரியர் குறிப்பு

உலகெங்குமிருந்து காப்புறுதி பற்றிய கட்டுரைகள், செய்திகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றை ஆங்கிலத்திலும் அனுப்பலாம்.

இச்சஞ்சிகையில் இடம் பெறும் கவிதை, கட்டுரை, பேட்டி என்பவற்றில் அடங்கிய கருத்துகளுக்கு அவற்றின் ஆக்குநர்களே பொறுப்பாவார்.

வருமுன் காப்போம் எனும் அர்த்தத்தில் பணிபுரியும் நிறுவனங்களிட மிருந்து விளம்பரங்கள் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன.

அட்டைப்படம் - ஆழ்கடல் பேரலை மற்றும் முன்னாள் ஜனாதிபதி களிடமிருந்து முறையே திரு. வேலும் மயிலும், திரு. ராஜரட்ணம் ஆகியோர் பரிசில்கள் பெறுதல்.

ஆசிரியர்
காப்புறுதி உலகம்
36, பெரேரா ஒழுங்கை
கொழும்பு - 06, இலங்கை
☏: 011-[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காப்புறுதி**



கலந்துரையாடல்

- புரியவன்

# காப்புறுதி என்றால் என்ன?

நித்தியவாணியும் வசந்தியும் பாடசாலை நண்பிகள். இன்று பல்கலைக்கழக மாணவிகள். வெள்ளிக்கிழமைகளில் வெள்ளவத்தை பம்பலப்பிட்டி மயூரேசன் கோவிலில் வழிபாடு முடிந்ததும் பெற்றோர் வரும் வரை அக் கோவிலில் உள்ள வெள்ளை மணல் தரையில் இருந்து ஏதாவது விடயம் பற்றி கலந்துரையாடுவது வழக்கமாகும். அவ்வகையில் இம்முறை காப்புறுதி பற்றிய கலந்துரையாடலை இங்கு தருகிறோம்.

வாணி :- வசந்தி இன்றைக்கு காப்புறுதியைப் பற்றி கதைப்போமா!

வசந்தி :- நல்ல விடயம் ம்.... சொல்லுங்கோ! என்ன? முதலில் காப்புறுதி என்றால் என்ன?

வாணி :- காப்பு + உறுதி = காப்புறுதி. அதாவது பாதுகாப்பு உறுதி.

வசந்தி :- யாருக்கு?

வாணி :- தங்களின் உயிர் உடைமைகளைக் காப்புறுதி செய்தவர்கட்கு.

வசந்தி :- அதென்ன பாதுகாப்பு?

வாணி :- பணரீதியான பாதுகாப்பு.

வசந்தி :- ஒன்றுமே விளங்க வில்லை. கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்கோ வாணி.

வாணி :- உதாரணத்துக்கு ஒருவர் தனது ஆயுளை ஒரு காப்புறுதி நிறுவனத்திடம் காப்புறுதி செய்துள்ளார்.

வசந்தி :- சொல்லுங்கள்...

வாணி :- அவருக்குக் கடுமையான சுகவீனம் என எடுப்போம். அந்த வைத்திய சாலையிலும் பணம் செலவு. இதற்கெல்லாம் அந்த அவர் காப்புறுதியின் கீழ் உதவித்தொகைப் பெறலாம்.

வசந்தி :- இவ்வளவும் தானா?

வாணி :- இல்லை வசந்தி. தனது ஆயுளை காப்புறுதி செய்தவர் ஒருவர் இல்லாமல் காப்புறுதிக் காலம் வரை வாழ்ந்து விட்டால் அக்கால முடிவில் அவருக்கு காப்புறுதித் தொகையும் இலாபப் பங்கும் வழங்கப்படும்.

உதாரணமாக, 50,000 ரூபா வீதம் 10 வருடங்கட்கு ஒருவர் தனது ஆயுளை காப்புறுதி செய்கிறார் என எடுப்போம். இதற்கு மாதா மாதம் 500 ரூபா கட்டுப்பணம் செலுத்துகிறார். 10 வருட முடிவில் 50,000 ரூபாவும் இலாபப் பங்கும் இவருக்கு வழங்கப்படும்.

வசந்தி :- அப்ப நல்ல விசயம் தானே சொல்லுங்கோ. ஒரு சில வேளை 2 வருடங்கள் தொடர்ந்து காசு கட்டி வரும்போதே ஒரு நாள் இறந்து விட்டால்...?

வாணி :- 50,000 ரூபாவும் 2 வருட கால இலாப பங்கும் அவருடைய மனைவி பிள்ளைகட்கு, அவர்கள் இல்லாவிட்டால் நியமனம் பெற்றவருக்கு வழங்கப்படும்.

வசந்தி :- அட... 2 வருடங்களுக்கு ஆக 12,000 (500 x 24) காசே கட்டியிருப்பார். இதற்கு 50,000 ரூபாவும் இலாபப் பங்குமா! அப்படியா?

வாணி :- இது மட்டுமில்லை. அவர் ஒருவேளை விபத்தில் அகப்பட்டு இறந்தால்...

வசந்தி :- ஒன்றுமில்லையா?

வாணி :- என்ன வசந்தி! சொன்னால் ஆச்சரியப்படுவாய். காப்புறுதித் தொகையிலும் இரண்டு மடங்கு தொகை. அதாவது ஒரு இலட்சம் ரூபா அவரது உரிமைக்காரர் அதாவது மனைவி பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படும். இல்லாவிட்டால் தாய் தந்தை சகோதரங்கட்கு வழங்கப்படும்.

வசந்தி :- ஆ!... எவ்வளவு பெரிய தொகை? இப்ப பாருங்கோ நம்ம நாட்டிலே இந்த வாகனம் ஓட்டும் சிறுவர்கள் எல்லாம் கண் மண் தெரியாமல் வேகமாக, சில வேளை மதுபோதையில் வாகனங்களை ஓட்டுகின்றனர். இதனாலே எவ்வளவு வாகன விபத்துகள், விபத்து மரணங்கள் ஏற்படுகின்றன. இப்படியான நிலைமையிலே எல்லாரும் ஆயுட் காப்புறுதி செய்வது நல்லதுதானே.

வாணி :- ஆயுட்டுமா? இப்போதைய போர் சூழ்ந்து இருக்கும் இந்த யுத்த நிலைமைக்கு ஒரு பெரிய இடம் தந்து நன்றி சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு எத்தனை பேர் இறப்பினம். இப்ப கூட சிறுமிகள் மட்டும் 40,000 பேர் விதவைகளாம். பாருங்கோ பாவம் தானே அவர்கள், அவர்களுடைய பெற்றோர் பிள்ளைகள்?

வசந்தி :- அப்படியென்றால் ஆயுட் காப்புறுதியைச் செய்வதால் நட...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாவது கிடைக்குமே. அந்தப் பணத்தைக் கொண்டு ஏதாவது மாற்று வழி தேடலாமே.

வாணி:-அது மட்டுமில்லை வசந்தி. ஒவ்வொருவரும் தங்கள் வீடு, வாகனம், கடை, தொழிற்சாலை, பணம், நகை எல்லா உடைமைகளையும் கூடக் காப்புறுதி செய்தால் அவற்றுக்கு சேதமோ இழப்போ ஏற்படும்போது உரிய நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

வசந்தி:-அதெப்படி?

வாணி:-எந்தப் பொருளையும் ஒரு காப்புறுதி நிறுவனத்திடம் காப்புறுதி செய்தால் அப்பொருள் சேதமடைந்தால் நட்டஈடாக காப்புறுதித் தொகைக்குள் ஒரு தொகை வழங்கப்படும். பொருள் முற்றாக அழிந்தால் காப்புறுதித் தொகை முழுவதும் நட்டஈடாக வழங்கப்படும். உதாரணமாக ஒருவர் தமது வீட்டைத் தீப்பற்றுதலுக்கெதிராக 5 இலட்சம் ரூபாவுக்கு காப்புறுதி செய்திருக்க, வீடு தீயால் சேதமடையு மிடத்து 2 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது என்றால் காப்புறுதி நிறுவனம் 2 இலட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்கும். இக்காப்புறுதிக்காக வருடத்துக்கு ஒரு தடவை சொற்ப தொகையே காப்புறுதி தவணைக் கட்டணமாக அறவிடப்படும்.

வசந்தி:-அப்படியா? அப்ப நான் எங்களுடைய வீட்டையும் காப்புறுதி செய்யச் சொல்லிச் சொல்ல வேண்டும். (இருவரும் தங்கள் பெற்றோரை நோக்கி ஓடிச் செல்கின்றனர்).


(தொடரும்)

## மூக்குக்கு காப்புறுதி

**-சீகா**

எங்கோ தொலைதூர நாடாம் - இங்கே
 ஒரு பால வழமையை.
ஜூலியஸ் மேலன் எனும் நிபுணராம் - அவரே
 முகரும் கலையில் வல்லவராம்.
மணம் தன்னை முகர்ந்தே - தரத்தை
 விளக்கும் கடமை செய்பவராம்,
தூர்த்தகாங்கள் எனும் ஊரே - அவ்வூர்
 ஐரோப்பாவில் சிறந்த நிபுணராம்,
அமெரிக்கா சென்ற போதினிலே - அவரது
 அழகிய மூக்கினை மட்டுமே.
அமெரிக்கக் காப்புறுதிக் கம்பனியிடம் - அதில்
 காப்புறுதி செய்ததுவே வழமையை,
ஐம்பத்தி ஐந்து இலட்சம் - அத்துடன்
 இருபத்தி ஐந்து ஆயிரமாம்.
பெரிய காப்புறுதித் தொகையோ - எப்படி
 அவர் மூக்கின் பெருமை?
மூக்கினையே காப்புறுதி செய்திடவே - நீங்கள்
 முக்கிய ஆதாரமே காக்கவேண்டுமின்.
மட்டற்ற மதிப்புள்ள உடமைக்கே - நீர்
 காப்புறுதி செய்வீர் இன்றே.
போக்குவோம் உங்கள் கவலைகளையே
 அன்றாடம்
 போக்கிடுமே உடமைக் காக்குமே.
நீங்களும் உங்கள் உடமைகளையோ எங்கள்
 காப்புறுதிகள் தன்னை பெற்றிடுவீர்

நன்றி - காப்புறுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் காப்பீடு

இரா. கோபிநாத்.
முன்னாள் தலைவர் மற்றும் தலைமை
நிர்வாக அதிகாரி
யுனை. ஆ.கா.க (இலங்கை)



- ஆயுள் காப்பீடு?
- வேண்டாம் எனக்குத் தேவை இல்லை.
- தெரியுமா, நான் தேவையான அளவு முதலீடு செய்துள்ளேன்?
- தெரியுமா, நான் நல்ல உடல்நிலையோடுதான் உள்ளேன்?
- தெரியுமா, என் குடும்பத்திற்குத் தேவையான அனைத்தும் உள்ளன? அவர்கள் ஒன்றும் தெருவிற்கு வந்துவிடமாட்டார்கள்.
- இதைவிட நல்ல முதலீடுகள் உள்ளன.
- ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களில் வருமானம் குறைவு.
- இறுதியாக முதிர்வின்போது என்ன கிடைக்கும்?

இவை ஒரு சிலவே. முடிவில்லாத தடைகள். ஆயுள் காப்பீடு வாங்காமல் இருக்க 100 காரணங்களைக் கூறலாம். ஆனால் வாங்குவதற்குக் குடும்பத்தின் மீதும், தன் மீதும் அன்பு ஒன்று மட்டும்தான் காரணமாக முடியும்.

உலகத்தில் மருத்துவத் துறையின் முன்னேற்றங்களால் மனிதனின் வாழ்நாள் அதிகரித்து உள்ளது. முறையான வயதில் அகால மரணம் என்பதைவிட அதிக காலம் வாழ்வது என்பது அச்சத்தைத் தருகிறது.

எதிர்காலத்திற்கான சேமிப்பு மிக அவசியம். இள வயதில் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக் குடும்பத்திற்கான தேவையை அதிகம் நிறைவேற்ற முடிகிறது. ஆண்டுகள் செல்லச் செல்ல இளமையும், சுறுசுறுப்பும் குறைந்துகொண்டே வருகின்றன. வயதாக ஆக நமது ஆற்றலும் குறைந்துகொண்டே வருகிறது. ஒருவருடைய வருவாய்க்கும் அவருடைய உழைப்பும் சக்திக்கும் நேரிடையான தொடர்பு உள்ளது. வருமுன் காக்கும் முகமாக, எதிர்காலத் தேவைகளுக்காகச் சேமிப்பு மிக அவசியம். ஆயுள் காப்பீடு என்பது ஒரு நீண்ட கால சேமிப்புத் திட்டம்.

நோயுற்று இறப்பது ஒருபுறம் இருந்தாலும், சாவு வரப் பல காரணங்கள் உண்டு. ஒருவரின் இறப்பினால் குடும்பத்தினரின் வருமானம் குறைந்து நின்று போகிறது. ஒருவர் இறந்து விடுவதாலேயே, குடும்பம் தெருவிற்கு வந்து விடுவதில்லை. எப்படியாவது சமாளிக்கிறார்கள். மனிதர்கள் எல்லா சூழ்நிலைக்கும் ஏற்ப தங்களை மாற்றிக்கொள்பவர்கள்தானே. ஆனால் இறந்து போகும் மனிதரின் ஈட்டி வந்த வருவாய் இல்லாமையும், எதிர்காலத்திலும் கணிசமான அளவு குறைந்துதான் போகிறது. முறையாகத் திட்டமிடப்படும் ஆயுள் காப்பீடு, இந்த வருவாய் இழப்பைக் குறைக்கிறது அல்லது சரி செய்கிறது. அவருடைய குடும்பத்தினர் மீதுள்ள அன்புதான் இந்த இழப்புகளிலிருந்து விடுபடக் கூடிய உத்தரவாதத்தைத் தருகிறது. சில நூறு ரூபாய்களைச் செலவுசெய்து, ஆயிரங்களை வாங்க இயலும்.

சொத்துக்களைக் காப்பீடு செய்ய வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். தொழிற்சாலை, கார், கட்டிடங்கள், சரக்குகள் என எல்லாவற்றையும் காப்பீடு செய்கிறோம். ஆனால் மிக முக்கியமான சொத்து எது? இந்தச் சொத்துக்களை முதலில் உருவாக்கியது யார்? அவருக்கு ஆயுள் காப்பீடு வேண்டாமா?

அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களான உங்கள் படைப்புகளைத் தவறாமல் காப்பீடு செய்யுங்கள். அதைவிட முக்கியமாக அவற்றின் படைப்பாளியான உங்களை ஆயுள் காப்பீடு செய்துகொள்ளுங்கள். போதுமான அளவு காப்பீடு என்றால் - எவ்வளவு எடுத்தால் போதுமானது? நான் போதுமான அளவு காப்பீடு செய்துள்ளேனா? இதை எப்படி நிர்ணயிப்பது?

நமது வாகனத்தையோ (அ) எந்திரங்களையோ காப்பீடு செய்வதற்கான மதிப்பீடு எளிதானது. வாங்கிய விலை தெரியும். அதற்கு மேல் அதற்குண்டான முதலீட்டுச் செலவுக் கணக்கு இருக்கும். இதை வைத்து எவ்வளவுக்குக் காப்பீடு செய்வது என்பதை அறியலாம். நமக்கும் (மனிதனுக்கும் அப்படி) ஒரு விலைப்பட்டியலை அந்த இறைவன் அளித்திருந்தால், எவ்வளவு எளிதாக இருக்கும். நம்மை உற்பத்தி செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும் செலவு தெரிந்தால், படிப்புச் செலவும், சாப்பாட்டுச் செலவும் சேர்த்து மொத்தமாக நம்மீது எவ்வளவு செலவு (அ) முதலீடு செய்துள்ளோம் என்பதைக் கணக்கிட்டு காப்பீடு செய்யக்கூடிய தொகையை நிர்ணயிக்கலாம்.

ஆனால் இந்த முறையில் கூடத் தவறு உள்ளது. மற்ற சொத்துக்களைப் போல் அல்லாமல், மனித உயிருக்குக் காலம் கூடக்கூட மதிப்பும் கூடுகிறது. என் இன்றைய மதிப்பைக் கணக்கிடுவதா? நீண்ட காலத்தின் மாற்றங்களை வைத்து எதிர்கால மதிப்பையும் கணக்கில் கொண்டு ஆயுள் காப்பீட்டை நிர்ணயிப்பதா?

ஆயுள் காப்பீட்டிற்கு மட்டுமே பொருந்தக்கூடிய தனி ஒரு கேள்வியும் உண்டு. என்னை யார் சொந்தம் கொண்டாடுவது? பொருளுக்குச் சொந்தக்காரர்தான் காப்பீடு செய்ய வேண்டும். அந்தக் குறிப்பிட்ட பொருளின் அழிவினால் ஏற்படும் நட்டத்திற்கான இழப்பீடு அவருக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் ஆயுள் காப்பீட்டில் இறப்பினால் யாருக்கு இறப்புரிமம் கொடுக்கப்பட வேண்டும்?

பொறுப்புள்ள தந்தை/ கணவன்/ மனைவி/ சகோதரன்/ சகோதரி/ முதலாளி ஆக நான், எனக்கு மட்டுமல்லாமல், என் மீது அக்கறை கொண்ட/ என் அக்கறைக்கு உள்ளான மற்றவருக்கும் சொந்தமாக ஆகின்றேன் அல்லவா?

நன்கு திட்டமிடப்பட்ட ஆயுள் காப்பீட்டுத் திட்டம் இந்தக் கேள்விகளுக்குரிய பதிலைக் கொடுக்கும். ஆயுள் காப்பீட்டிற்கான தவணைக் கட்டணம் வயதை அடிப்படையாகக் கொண்டது. வயது கூடும்போது, தவணைக் கட்டணமும் கூடிவிடும். அதனால் முறையான அணுகுமுறை, தேவையின்றி அதிக தவணைக் கட்டணம் செலுத்துவதைக் கட்டுப்படுத்தும்.

இதனாலேயே, ஆயுள் காப்பீடு திட்டமிடுவதை, தொழில் முறை முகவர்களைக் கேட்டுச் செய்ய வேண்டும். மனித வாழ்வின் மதிப்பு, முதலீட்டுத் தேவை ஆய்வு முறை, நிகர மதிப்பின் மீது ஆயுள் காப்பீடு போன்ற முறைகளில் எவ்வளவு காப்பீடு செய்யவேண்டும் எனத் தொழில் முறை முகவர்கள் விவரித்துக் கூறுவர். உலக முழுமைக்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாக்கம் இது. உலகம் முழுவதும் உள்ள காப்பீட்டு நிறுவனங்களில் ஆயுள் காப்பீட்டின் தேவை இந்த அடிப்படையில்தான் முடிவு செய்யப்படுகிறது.

மேற்குறித்த கருத்தாக்கங்களை எளிய முறையில் காண்போம்.

1) முதலீட்டுத் தேவை ஆய்வு முறை : குடும்பத் தலைவர் அகால மரணம் அடைந்தால், அவரது குடும்பம் தொடர்ந்து நல்ல நிலையில் வாழ அவருடைய வருவாய் தொடர்ந்து கிடைக்க எவ்வளவு முதலீடு தேவைப்படுகிறது என்று அறிந்து அதற்கேற்றபடி காப்பீடு செய்கிற முறை. (CAPITAL NEED ANALYSIS)

2) மனித வாழ்வின் மதிப்பு: ஒரு மனிதன் ஒரு வாழ்நாள் முழுமைக்கும் எவ்வளவு ஈட்ட முடியுமோ, அதற்குச் சமமாகக் காப்பீடு செய்கிற முறை. (HUMAN LIFE VALUE)

3) நிகர மதிப்பு: நிறுவனங்களில் கணக்கிடுவதைப் போல, சொத்துக்கு மேல் உள்ள நிகரக் கடன் அளவிற்காவது (குறைந்த அளவு) தனிப்பட்ட நபரும் ஆயுள் காப்பீடு செய்கிற முறை. (NETWORTH)

இது மிகவும் எளிமையாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இதனடிப்படையில், இன்றைக்கு வட்டி விகிதம், ரூபாயின் மதிப்பு, வரி விகிதங்கள், பணவீக்கம், காலப் போக்கில் நிகழக்கூடிய வேறு மாற்றங்கள் இவை அனைத்தையும் கணக்கில் கொண்டு ஒருவர் எவ்வளவு தொகைக்கு ஆயுள் காப்பீடு செய்யவேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டும்.

அதனால் தொழில்முறை முகவர்களைக் கலந்து ஆய்வு செய்து உங்களின் ஆயுள் காப்பீட்டுத் தேவைகளை முடிவுசெய்யுங்கள். தொழில் முறை முகவர்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு உங்களிடம் எந்த விதக் கட்டணத்தையும் எதிர்பார்ப்பதில்லை. ஒன்றே ஒன்று மட்டும்தான், உங்கள் கனிவான கவனத்தையும் சிறிதளவு நேரத்தையும் தான் கேட்கின்றனர்.

***

*(ஆசிரியர் குறிப்பு: இலங்கையில் 'காப்புறுதி' எனும் சொற்பிரயோகமே பொதுவான பாவனையிலுள்ள பதமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி ஒப்பந்தங்களும் அதனை ஆளும் கோட்பாடுகளும்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



ஆங்கிலமூலம் - திருமதி பீ.பீ. பெரேரா.
எவ்.சீ.ஐ.ஐ. (பட்டயக்காப்புறுதியாளர்)

இலங்கையில் நாம் ரோமன் டச்சுச் சட்டம், கண்டியச்சட்டம், தேசவழமைச்சட்டம், முஸ்லிம் சட்டம், ஆங்கிலச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களாலும் ஆளப்படுகின்றோம். நாட்டின் பொதுச்சட்டமானது ரோமன் டச்சுச் சட்டமாக இருந்தபோதிலும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளைப் போல் காப்புறுதி ஒப்பந்தங்களும் பலவும் ஆங்கிலச் சட்டக்கோட்பாடுகளின் பிரயோகத்துக்கு உட்பட்டனவாக உள்ளன. இக்கோட்பாடுகளுட் பலவும் ஒப்பந்தச் சட்டத்திலிருந்தும் தோன்றுகையில், காப்புறுதி ஒப்பந்தங்கட்கு மட்டும் ஏற்புடையதாகக் கூடிய சட்டப் பகுதிகளும் உள.

### காப்புறுதி ஒப்பந்தம் என்றால் என்ன?

காப்புறுதி என்பது ஒரு கட்சியினர் (காப்புறுதி வழங்குபவர்) அவருக்கு மறு கட்சியினரால் (காப்புறுதி செய்யப்பட்டவர்) கொடுப்பனவு செய்யப்படும் பணத்துக்குப் (முனைக்கட்டணம்) பிரதியுபகாரமாக, அம் மறு கட்சியினருக்கு சில சம்பவங்கள் நிகழ்ந்தமையானதனாலுக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிராக அல்லது சம்பவங்கள் ஏதேனும் இடம்பெற்றமை காரணமாக உரிய பணத்தொகையை அல்லது குறிப்பிடப்பட்ட தொகையைக் கொடுப்பனவு செய்து நட்டஈடளிப்பதாகச் சம்மதிக்கும் ஓர் ஒப்பந்தமாகும். காப்புறுதி ஒப்பந்தங்கள் பல சாதாரண ஒப்பந்தங்களாகும். அத்துடன் இவை நிறைவேற்றப்படுபவையாகும். சகல சாதாரண ஒப்பந்தங்களிலும் மூன்று முக்கிய அம்சங்களாவன கொடை முனைவு, ஏற்பு, பிரதிபலன் ஆகியனவாகும்.

### கொடைமுனைவு (Offer)

கொடை முனைவானது பொதுவாகப் பிரேரணையாளரிடமிருந்தே வருகின்றது. காப்புறுதியைப் பெற விண்ணப்பிப்பவரே பிரேரணையாளராவார். காப்புறுதியைப் பெறுவதற்கு, பிரேரணைப்படிவம் மூலம் அல்லது பாயக் காப்புறுதியாயின் தரகரது காசித அட்டை (Slip) மூலம் பிரேரணை சமர்ப்பிக்கப்படும். பிரேரணைப்படிவம் ஆனது, காப்புறுதி செய்யப்படுபவரது அபாயம் தொடர்பான சகல விவரங்களையும் பெறும் நோக்கத்துடன் காப்புறுதி வழங்குபவரால் தயாரிக்கப்பட்ட ஆவணமாகும்.

தமிழாக்கம் - கோபாலசேகர்

பிரேரணையாளர் பிரேரணைப்படிவத்தில் கேட்கப்பட்ட கேள்விகட்கெல்லாம் விடையளிப்பதுடன் முக்கியமான சகல விவரங்களையும் வெளியிடலும் வேண்டும்.

### ஏற்பு (Acceptance)

காப்புறுதி வழங்குபவருக்குப் பிரேரணைப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதனை காப்புறுதி வழங்குபவர் படித்துப் பார்த்து அதனை ஏற்பது பற்றிய தனது சம்மதத்தைத் தெரிவிப்பார். உரிய தவணைக்கட்டணம் செலுத்தப்படுமிடத்து குறிப்பிட்ட அபாயத்துக்கான பொறுப்பினைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிடுவர்.

சில சந்தர்ப்பங்களில் உதாரணமாக ஆயுட்காப்புறுதிகட்கு விசேட அறிக்கைகள் கோரப்படுவது போன்று மருத்துவ அறிக்கை உட்பட அல்லது மேலதிக தவணைக்கட்டணம் ஒன்றுடனேயே பிரேரணையானது ஏற்றுக்கொள்ளப்படும் என்று காப்புறுதியாளர் குறிப்பிடலாம். இச்சந்தர்ப்பங்களில் ஏற்பானது எதிர்க்கொடை முனைவாக (Counter Offer) மாறுகின்றது. இதனால் பிரேரணையாளரின் சம்மதமே இங்கே ஏற்பாக இடம்பெறுகின்றது.

### பிரதி பலன் (Consideration)

பிரதிபலன் என்பது சில வகையான உரிமை, அநுகூலம், நலவுரித்து அல்லது ஒரு கட்சியினருக்கு ஏற்படும் இலாபம் அல்லது மறு கட்சியினரால் ஏற்கப்படும் அல்லது அனுபவிக்கப்படும் சேதம், இழப்பு அல்லது பொறுப்பு என்பனவற்றை கொண்டுள்ளதாகும். காப்புறுதி ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை பிரதிபலன் என்பது காப்புறுதி செய்யப்பட்டவரிடமிருந்து, காப்புறுதி வழங்குபவருக்குச் செல்லும் தவணைக்கட்டணமாகும், காப்புறுதி வழங்குபவரிடமிருந்து காப்புறுதி செய்யப்பட்டவருக்கான நட்டஈடு வழங்குவதற்கான உறுதிப்பாடுகள் இடம்பெறுகின்றது.

காப்புறுதித்தகு நலவுரித்து (Insurable Interest), அதியுயர் நன்நம்பிக்கை (Utmost good faith), அண்மித்த காரணம் (Proximate Cause), நட்டஈடு (Indemnity) உரிமை மாற்றமும் பங்களிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Subrogation & Contribution) என்பன யாவும் காப்புறுதி ஒப்பந்தங்களை ஆளும் விசேட சட்டக்கோட்பாடு களாகும். ஆயினும் காப்புறுதிக்கு அடித்தளமாகவுள்ள இவ்விசேட கோட்பாடுகளானவை இன்றைய மாற்றம் பெறு உலகில் மாற்றத் துக்கோ மெருகூட்டப்படலுக்கோ உட்படக் கூடியவையாகும். இவை பற்றித் தனித் தனியாக உற்று நோக்குதல் நன்றாகும்.

**காப்புறுத்தகு நலவுரித்து** (Insurable Interest)

'காப்புறுத்தகு நலவுரித்து' என்பது காப்புறுதி செய்யப்பட்ட வருக்கும் காப்புறுதி செய்யப்படும் விடயத்துக்கும் சட்டரீதியாக அங்கீ காரம் பெற்ற நிதிசார் தொடர்பி னின்றும் தோன்றும் காப்புறுதி செய்வதற்கான சட்டரீதியான உரிமை என வரைவிலக்கணம் செய்யப்பட லாம். காப்புறுதிக்கான விடயமென்பது சட்ட ரீதியான உரிமையிழப்பின் அல்லது பொறுப்பின் தோற்றத்துக்கு காரணமாக அமையக் கூடிய இயல்பாகவே பெறுமதியுடைய ஏதேனும் சொத்தாக அல்லது சம்பவமாக இருக்கலாம். இதனால் தான் காப்புறுதிக்கான விடயமானது தீயபாயக் காப்புறுதியில் வீடு அல்லது தொழிற்சாலையாகவும், ஆயுட்காப்புறுதியில் தனியாளின் ஆயுளாகவும், கடலபாயக் காப்புறுதி யில் கப்பல் அல்லது கப்பற் பொருளா கவும், விபத்துக் காப்புறுதியில் சொத்துக்கான சேதம் அல்லது ஒருவரது கண்களுக்கான அல்லது விரல்களுக்கான காயங்களாகவும், இருக்கக் கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் காப்புறுதியின் செயற் பாடானது காப்புறுதி விடயத்தில் மட்டுமன்றி சம்பவத்தை அல்லது சொத்தினைப் பொறுத்தவரை, காப்புறுதி செய்தவரது நலவுரித்திலும் தங்கியுள்ளது என்பதும் இந்நல வுரித்தே ஒப்பந்தத்தின் விடயப் பொருளாக அமைகின்றதென்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். எனவே காப்புறுதியில் விடயப் பொருளானது சொத்தாக அல்லது ஆயுளாக அல்லது பொறுப் பாக இருக்கக் கூடிய அதே வேளை யில் காப்புறுத்தகு நலவுரித்தானது (Insurable Interest) காப்புறுதி ஒப்பந்தத்தின் விடயப் பொருளாக அமைகின்றது. இவ்வுண்மையானது காஸ்ரெலைன் எதிர் பிறிஸ்டன் 1883 வழக்கில் நன்கு தெளிவாக்கப்பட் டுள்ளது. இவ் வழக்கில் கூறப்பட்ட தாவது; 'தீயபாயக் காப்புறுதிப் பத்திரத்தில் காப்புறுதி செய்யப்பட் டிருப்பது எது? வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் செங்கற்களும் ஏனைய பொருட்களுமல்ல; காப்புறு தியின் விடயப் பொருளில் காப்புறுதி செய்யப்பட்டவருக்குள்ள நலவுரித் தாகும். எனவே ஒவ்வொரு காப்புறுதி ஒப்பந்தத்துக்கும் 'காப்புறுத்தகு நலவுரித்து' இருப்பது மிகவும் அவசி யமாகும். பல வருடக் கணக்காக ஆக்கப்பட்ட சட்டவாக்கங்களும் இம் முக்கியத்துவம் வாய்ந்த கோட் பாட்டை உருவாக்கியோ அல்லது ஒழுங்குபடுத்தியோ உள்ளன. இவற்றுள் மிகவும் பிரபலமானவை:-

1774 ஆம் ஆண்டின் ஆயுட்காப் புறுதிச் சட்டம் (Life Assurance act 1774)

1906 ஆம் ஆண்டின் கடலபாயக் காப்புறுதிச் சட்டம் (Marine Insurance act)

1945 ஆம் ஆண்டின் சூதாட்டச் சட்டம்.

எனவே செல்லுபடியான ஓர் ஒப்பந்தத்தில் காப்புறுத்தகு நல வுரித்தானது வெளிப்படையாக இருத்தலவசியமாகும். மேலும் இக் காப்புறுத்தகு நலவுரித்து பல்வேறு காப்புறுதிகளிலும் வித்தியாசமான கால கட்டத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருப்பதையும் நாம் ஞாப கப்படுத்தல் அவசியமாகிறது. கடல பாயக் காப்புறுதியைப் பொறுத்த வரை, ஏதேனும் இழப்பு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மட்டும் இக் காப்பு றுத்தகு நலவுரித்து பற்றி வெளிப் படுத்தப்படல் வேண்டும். ஆயுட் காப்புறுதியைப் பொறுத்தவரை எதிர் மாறாகவுள்ளது. இங்கே ஆரம்பத்தில் மட்டும் காப்புறுத்தகு நலவுரித்து வெளிக்காட்டப்படல் வேண்டும். ஏனைய காப்புறுதிகள் யாவற்றுக்கும் காப்புறுதியைப் பெறும்போதும், ஏதேனும் காப்புறுதிக்கான உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படும் போதும் இது பற்றி வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

**அதியுயர் நன்நம்பிக்கை** (Utmost Goodfaith)

பல வகையான ஒப்பந்தங்களி லெல்லாம் கொள்வனவு செய்பவன் விற்பனை செய்வோரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியுளது. இது எப்பொழுதும் அங்கீகரிக்கப்படக் கூடியதாக இருக்கவில்லை. 1967ஆம் ஆண்டில் பிறழ்பகர்வுச் சட்டம் இயற்றப்படும் வரை அநேகமான வர்த்தக ரீதியான ஒப்பந்தங்கள் 'தலை எச்சரிக்கை' (Caveat emptor) (கொள்வனவு செய்வோன் அவதானம்) எனும் கோட்பாட்டால் ஆளப்பட்டன. இக் கோட்பாடானது ஒப்பந்தக் கட்சி யினரை, ஒரு பகுதியைப் பாதிக்கக் கூடிய விடயங்களைப் பொறுத்தவரை கூட மௌனமாக இருக்க இட மளித்தது.

பொருள் விற்பனை (Sale of goods) தொடர்பான சாதாரண ஒப்பந்தங்களைப் போலன்றி காப்புறுதி ஒப்பந்தங்களில் ஒப்பந்தந்தத்தின் ஒரு கட்சியினர் அதாவது பிரேரணையாளர் காப்புறுதிக்கெனப் பிரேரிக்கப்பட்டுள்ள அபாயம் பற்றி தெரிந்தவர் அல்லது தெரிந்திருக்க வேண்டியவராக இருக்க, மறு கட்சியினர் அதாவது காப்புறுதி வழங்குபவர், காப்புறுதிக் கான அபாயம் பற்றி மதிப்பீடு செய்வதற்கு, பிரேரணையாளரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட தகவல்களிலேயே தங்கியிருத்தல் வேண்டும்.

இதன் காரணமாக காப்புறுதி ஒப்பந்தங்கள் நல்லெண்ணத்தை அல்லது அதியுயர் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தங் களாக உள்ளன எனலாம். ஒப்பந்தத் தின் ஒரு கட்சியினர் இவ் அதியுயர் நம்பிக்கைக் கோட்பாட்டைப் பின்பற் றாவிட்டால் பாதிக்கப்பட்ட மறுகட்சி ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்யலாம். இவ் அதி உயர் நம்பிக்கைக் கோட்பாட்டைப் பேணும் கடமை இரு கட்சியினருக்கும் உரியதாகும். காப்புறுதி வழங்குபவரும் தாம் வழங்கும் ஒப்பந்தம் பற்றிய சுருக்க விதிகள் பற்றி வெளியிடல் வேண்டும்.

**வெளிப்படுத்தும் கடமை** (Duty of Discloser)

காப்புறுதி பெறுவதற்கான பிரேரணை முன் வைக்கப்படும்போது, இக் காப்புறுதி தொடர்பான சகல விடயங்களையும் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்துதல் பிரேரணையாளரது கடமையாகும். "முக்கியமான விடயம்" என்பது, மதி நுட்பம் வாய்ந்த காப்புறுதி வரையும் ஒருவர் காப்புறுதி ஒப்பந்தத்தில் ஈடுபடலாமா என்றும், ஈடுபடுவதாயின் தவணைக்கட்டணத்தொகை எவ்வ ளவு என்பது பற்றியும் தீர்மானிக்க உதவும் உண்மை விடயம் எனலாம். பிரேரணையாளர் ஒப்பந்தம் நிறை வேற்றப்பட முன்னர் தனக்குத் தெரிந்த முக்கியமான தகவல்கள், உண்மைகள் யாவற்றையும் வெளிப்ப டுத்துதல் வேண்டும். இவ்வாறு வெளிப்படுத்தத் தவறினால் இதனால் பாதிப்படையும் மறு கட்சியினரின் விருப்பத்தின் பேரில் ஒப்பந்தமானது வெற்று வெறிதாக்கப்படலாம்.

கவனயீனமாகவோ அல்லது பிரே ரணையாளர் உண்மையில் முக்கிய மற்ற விடயமெனக் கருதியோ வெளி யிடாது விடினும்கூட வெளியிடும் கடப் பாடுண்டு. முக்கியமான விடயமா இல்லையா என்பது பற்றிப் பிரே ரணையாளர் தீர்மானிக்க முடியாது. விடயம் முக்கியமானதா இல்லையா என்பது பற்றிய இறுதித் தீர்மானம் சட்டப்படி நீதிமன்றத்தினாலேயே வழங்கப்படலாம்.

அதியுயர் நம்பிக்கை எனும் கட மையினின்றும் வழுவுதலானது பின் வரும் வகைகளுள் அடக்கப்படலாம்.

(அ) வெளியிடப்படாமை - கவனயீன மாக அல்லது பிரேரணையாளர் அதனை முக்கியமற்றதெனக் கருதி முக்கியமான உண்மை களை வெளியிடாது தவிர்த்தல்.

(ஆ) மறைத்து வைத்தல் - முக்கிய மான விடயங்களை வேண்டு மென்றே மறைத்து வைத்தல்.

(இ) மோசடி முறையான பிறழ்பகர்வு காப்புறுதி வழங்குபவரை ஏமாற் றும் நோக்குடன் வழங்கப்பட்ட கூற்றுக்கள்.

(ஈ) மோசடி முறையற்ற பிறழ்பகர்வு முக்கியமான விடயங்கள் தொடர்பான பிழையான கூற்றுக் கள். வெளிப்படுத்துங் கடமையா னது மீறப்பட்டுள்ளது எனக் காப்புறுதியாளர் கண்டுபிடித்தால் உடனும் பின்வரும் நடவடிக்கை களை மேற்கொள்ளலாம்.

1. மீறலைக் கவனிக்காமல் இருத்தல்.
2. பொறுப்பினைக் கைவிடல்.
3. ஆரம்பத்திலிருந்தே காப்புறுதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்.

எவ்வாறாயினும், வெளியிடாமை, கட்டுறுத்து மீறல் என்பன தொடர்பான சட்டமானது மிகவும் கடுமையான தாக இருப்பதுடன் நியாயமான முறையில் காப்புறுதி செய்யப்பட்ட ஒருவருக்கு எதிராகவும் செயற்படக் கூடிய அளவுக்கு மிகவும் கடுமையா னதாக உளது என்பது இன்று நிலவும் கருத்தாகும். இதனால் நீதி மன்றங் கள் தீர்ப்புக்களை வழங்கும் போது தாராளப் போக்குகளையுடையனவாக உள்ளன. இவ்வுண்மையை அண் மைக்கால ஆங்கில வழக்கொன்று விளக்குகின்றது.

**ஹெயர் எதிர் புறூடென்சியல் அசூறன்ஸ் கொம்பனி லிமிடெட் (1983)**

(Hair V Prudential Assurance Co. Ltd. (1983)

1969 இல் முடிவுறுத்தற் கட்ட ளைக்கு உட்பட்டதும் 1971இல் 250க்கு வழங்கப்பட்டதுமான வீட்டினை ஹெயர் காப்புறுதி செய்ய விரும்பினார். புறூடென்சியல் லிமிடெட் டினால் வழங்கப்பட்ட ஹோரத் அன்ட் ஹோம் காப்புறுதிப் பத்திரத்துக்கான பிரேரணைப் படிவத்தினை நிரப்பு கையில் பின்வருமாறு அவர் அதி லிருந்த கேள்விகளுக்கு விடைப கர்ந்தார்:

கேள்வி இல. (8) கட்டிடங்கள் நல்ல நிலையில் இருக்கின்றனவா?

விடை - ஆம்.

கேள்வி இல. (10) குடியிருப்பு வீட்டில் நீர் மட்டும் தனியாக வசிக் கிறீரா? அப்படியில்லாவிடின் முழு விவரங்களையும் தரவும்.

விடை - காப்புறுதி செய்யப்பட்டவரது மகன் இருக்கின்றார். ஆனால் பிரேரணையாளரே சொந்தக் காரன்.

கேள்வி இல. (11) விடுதலை அல்லாத நாட்களில் எவ்வளவு நாட்கள் காப்புறுதி செய்ய ப்படும் வீடு ஆட்கள் இல்லா மல் இருக்கும்?

விடை - கிட்டத்தட்ட நாளாந்தம் 8 மணித்தியாலங்கள் (கிழமை நாட்களில்)

ஹெயர் பிரேரணைப் படிவத்தில் தனது விடைகள் யாவும் உண்மை யெனவும் அபாயம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய விடயங்கள் எவையும் மறைத்து வைக்கப்படவில்லையென வும் உறுதி (கட்டுறுத்து) யளித்தார். ஹெயருக்கு காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது. பின்னர் தீயால் வீடு சேதமடைந்தது. ஹெயர் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் நட்டஈடு கோரி உரிமைக்கோரிக்கையைச் சமர்ப்பித் தார். அவரால் அளிக்கப்பட்ட விடைகள் பொய்யானவை என்று கூறி புறூடென்சியல் தனது பொறுப்பினைத் தவிர்த்துக்கொண்டது.

1) வீடு நல்ல நிலையில் இருக்க வில்லை.

2) கூறப்பட்ட மணித்தியால காலத் தில் மகன் அவ்வீட்டில் வசிக்க வில்லை. அது வெறுமையாகவே இருந்தது.

3) வீடு இறுதிக்கட்டளைக்கு (Closing order) உட்பட்டிருந்த முக்கியமான விடயம் பற்றி வெளியிடப்படவில்லை. எனவே ஹெயரின் கூற்றுக்கள் பொய்யா னவை என புறுடென்சியல் கம்பனி நட்டஈடு வழங்குவதற் கான தனது பொறுப்பை விலக்கிக்கொண்டது.

ஹெயர் என்பவருக்கான நீதி மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி,

1) ஆதாரங்களின்படி வீடு திருத்தஞ் செய்யப்பட்டு நல்ல நிலையில் இருக்கிறது.

2) வீட்டில் குடியிருப்பது தொடர்பான கட்டுறுத்தை ஹெயர் மீற வில்லை. காரணம் விடையளித்த காலத்து நிலைமையையே கேள்வி பதில் சுட்டிக்காட்டும் எனக் கருதியிருக்கிலாம். அத்து டன் காப்புறுதிக் காலத்தின் போது ஏதேனும் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

3) பிரேரணைப் பத்திரத்தில் குறிப் பிட்ட கேள்விகளைக் கேட்டதன் மூலம் புறூடென்சியல் கம்பனி முடிவுறுத்தற் கட்டளை (Closing order) பற்றிய தகவல் வெளி யிடும் தேவையை விட்டுக் கொடுத்திருக்கின்றது.

**அண்மித்த காரணம்** (Proximate cause)

இழப்பொன்று ஏற்பட்டால், காப்புறுதி வழங்குபவரிடமிருந்து நட்டஈடு பெறப்படு முன்னர், இவ் விழப்பானது காப்புறுதி செய்யப்பட்ட அபாயம் காரணமாகவே ஏற்பட்ட தென்பதை உறுதிப்படுத்த இழப்புக் கான காரணம் பற்றித் தீர்மானிக்கப் படல் வேண்டும். காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படாத அபாயமானது வெளிப்படையாகவே ஒப்பந்த விதிப் பிரமாணங்கட்குப் புறம்பானதாகும். இழப்பானது பாதுகாப்புத்தரவாதம் வழங்கப்பட்ட அபாயத்தின் காரணமாக ஏற்பட்டால் மட்டுமே காப்புறுதி செய்தவர் நட்டஈடு பெற முடியும். பல சந்தர்ப்பங்களில், பல சம்பவங்களுள் ஏதேனும் ஒன்றினால் இழப்பானது ஏற்படலாம். ஆனால் அண்மித்த காரணம் பற்றிய கோட்பாட்டின்படி, காப்புறுதி செய்யப் பட்டவர் நட்டஈடு பெறுவதற்கான காரணமானது அந்நட்டத்துக்கு மிகவும் அண்மித்ததாக இருத்தல் வேண்டும். அண்மித்த காரணம் என்பதற்கான வரைவிலக்கணம் பௌசே எதிர் ஸ்கொட்டிஸ் யூனியன் அன்ட் நைஷனல் (1907) (Pawsey V Scottish union & National 1907) என்ற வழக்கில் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. ‘அண்மித்த காரணம் எனப்படுவது, எந்தவொரு சக்தியின தும் தாக்கமின்றி புதியதும் தனிப் பட்டதுமானதோர் ஆதாரத்தினின்றும் தோன்றி இயங்குவதுடன், ஏதேனும் விளைவுகளை ஏற்படுத்தும் சம்பவத் தொடர்புகளை உருவாக்கும் விரை வான செயற்றிறன் கொண்ட காரணி யாகும். வழக்குத் தீர்ப்பொன்றின் போது, இவ் அண்மித்த காரணம் என்பதற்கான பொருள் விளக்கம் செய்வதில் அனுபவ ரீதியாகப் பல கஷ்டங்கள் அனுபவிக்கப்பட்டுள்ள மையைக் காணக்கூடியதாக உளது. யோக்சயர்டாலே எஸ்.எஸ் கொம்பனி எதிர் போக்குவரத்து மந்திரி (1942) எனும் வழக்கின் நீதிபதி உண்மை யானதும் செயற் றிறன் கொண்டது மான காரணமானது விஞ்ஞானிகளால் விளங்கிக் கொள்ளப்பட்ட அடிப் படையிலன்றி வழியில் செல்லும் ஒருவனால் விளங்கிக் கொள்ளப் பட்டவாறு சாதாரண பொது நோக்கு அடிப்படையில் தீர்மானிக் கப்படல் வேண்டும் என்று இருப்பினும் பொது நோக்குக் கோட்பாடுகளின் பிரயோகம் சில சந்தர்ப்பங்களில் முரண்பாடான தீர்மானங்கள் எடுப்பதற்கும் வழி சமைக்கலாம் என்பது கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டியதாகும்.’ என்று கூறியுள்ளார்.

ஒரு சந்தர்ப்பத்தில் கட்டிட மொன்றின் மூலைச்சுவர் மிகவும் மோசமான நிலைக்குள்ளாக்கப்பட்டது. இச் சுவரை இடிக்குமாறு உள்ளூர் அதிகாரசபையினால் கட்டளையிடப் பட்டிருந்தது. ஆனால் இவ்வாறு இடிக் கப்படுவதற்கு முன்பே, எதிராளியிடம் காப்புறுதி செய்யப்பட்ட சொத்தின் மீது இச் சுவர் இடிந்து வீழ்ந்தது. அவர்கள் நெருப்பு ஒரு தூர காரணி என்று வாதாடினார்கள். ஆனால் நீதிமன்றம் தீயால் ஏற்பட்ட தாக்கத் தின் விளைவாகவே சுவர் இடிந்து வீழ்ந்தது என்றும் எனவே தீ இங்கே அண்மித்த காரணி என்றும் தீர்ப்பு வழங்கியது.

இதையொத்த இன்னொரு வழக்கின் தீர்ப்பானது இதற்கு எதிர் மாறாக இருந்தது. தீயால் ஒரு சுவர் பலவீனப்படுத்தப்பட்டிருந்தது. பல நாட்களின் பின்னர் ஊழிக்காற்றின் போது சுவர் இடிந்து வீழ்ந்து லோ யூனியனிடம் காப்புறுதி செய்யப் பட்டிருந்த சொத்தினை அழித்தது. காப்புறுதி வழங்கியவர்கள் நெருப்பு அண்மித்த காரணியல்ல என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாடினர். நீதிமன்றமும் இதனை ஆதரித்து ஊழிக்காற்றும், சுவருக்கு முண்டு கொடுக்காதிருந்த சொந்தக் காரனது கவனயீனமுமே அண்மித்த காரணிகள் என்று தீர்ப்பு வழங்கியது.

### நட்டஈடு (Indemnity)

ஆயுட்காப்புறுதிப் பத்திரங்கள், சொந்த விபத்துக்காப்புறுதிப் பத்திரங்கள் தவிர்ந்த (சில விஷேட சூழ்நிலைகளில் வழங்கப்பட்டவை தவிர்ந்த) ஏனைய காப்புறுதிப்பத் திரங்கள் யாவும் நட்டஈட்டு உத்தர வாத ஒப்பந்தங்களாகும். ***அதாவது காப்புறுதி ஒப்பந்தங்களின் நோக்கமானது, காப்புறுதி செய் யப்பட்ட சம்பவம் நிகழ்ந்த பின், இச் சம்பவத்துக்கு நேர் முன்னர் காப்புறுதி செய்யப்பட்டவர் எத்தகைய பொருளாதார நிலை யில் இருந்தாரோ அந் நிலையில் அவரை வைப்பதாகும்.*** இழப்பு அல்லது சேதம் ஒன்று ஏற்பட்ட விடத்து அதனின்றும் அதன் காரணமாக காப்புறுதி செய்தவர் இலாபத்தை ஈட்டவைப்பது பொது வான கொள்கைக்கு முரணானதாகும்.

காப்புறுதிச் சட்டத்தின் அடிப் படைக் கோட்பாடுகள் தொடர்பாக மிகுந்த அதிகாரம் பெற்ற வழக் கெனக் கருதப்படும் ***கஸ்ரெலியன் எதிர் பிறெஸ்ரன்*** வழக்கில் கூறப்பட்டுள்ள கருத்தினை நோக்குதல் நன்றாகும், அதாவது;

'எனது கருத்துப்படி, காப்புறுதிச் சட்டத்துக்குப் பிரயோகிக்கப்பட்ட ஒவ்வொரு விதியினதும் அடிப்படை இதுதான். குறிப்பாக, கடலபாய தீயபாய காப்புறுதிப் பத்திரங்களில் உள்ளடங்கியுள்ள காப்புறுதி ஒப்பந்த மானது நட்டஈட்டு உத்தரவாத ஒப்பந்தமே, இழப்பீடு மட்டுக்குமான ஒப்பந்தமே. மேலும் இவ் ஒப்பந்தம் எனப்படுவது காப்புறுதி செய்யப் பட்டவர், காப்புறுதிப் பத்திரம் எப் பொருள் தொடர்பாக வழங்கப் பட்டதோ, அப்பொருளை இழந்ததும், அவருக்கு முழு நட்டஈட்டையும் வழங்குவதற்கானதாகும்.

ஆனால், அந்த முழு நட்டஈட் டுக்கும் அதிகப்படியாக எதுவும் வழங்கப்படலாகாது. இதுதான் காப்புறுதியின் அடிப்படைக் கோட் பாடாகும். மேலும் இக் கோட்பாட் டுக்கு முரணாக ஏதேனும் புதிய திட்ட மொன்று உதாரணமாக, காப்புறுதி செய்யப்பட்டவர் முழு இழப்பீடு பெறுவதனைத் தடைப்படுத்தும் அல்லது முழு இழப்பீட்டுக்கும் அதிகமான அளவு இழப்பீட்டினை வழங்கக்கூடியதாகக் கொண்டு வரப்படின், உண்மையில் இப்புதிய திட்டமானது பிழையானதாகும்.'

காப்புறுதி செய்யப்பட்டவர் தனது காப்புறுத்தகு நலவுரித்தளவுக்கு மேலாக எதனையும் அறவிட முடியாது. இதன் காரணமாக இழப்பீட்டு உத்தரவாதமானது காப் புறுத்தகு நலவுரித்துடன் தொடர் புடையதாக உள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காப்புறுதிப் பத்திரத் தின் விதிப்பிரமாணங்கள், நிபந்த னைகள், வரையறைகள் என்பவற் றுக்குட்படவே இழப்பீட்டு உத்தர வாதத்துக்கான ஏற்பாடானது உளது. எனவே காப்புறுதி பெறுபவர் இழப்பு எந்தளவிலாயினும் சரி முழு இழப்பீட்டினையும் பெறக்கூடியள வுக்கு போதியளவில் காப்புறுதி செய்தல் வேண்டும்.

### கடன் பற்றுரிமை மாற்றமும் பங்களிப்பும் (Subrogation & contribution)

கடன் பற்றுரிமை மாற்றம் பற்றிய கோட்பாடானது காப்புறுதி ஒப்பந்தக் கோட்பாடுகளினால் உருவாக்கப் படவில்லை. இது காப்புறுதி செய் யப்பட்டவர் தனக்குரிய நட்டஈட்டுக்கும் அதிகப்படியான நட்டஈட்டைப் பெறு வதனைத் தடுப்பதற்கெனப் பின்பற் றப்பட்ட இன்னோர் வழி முறையாகும். காப்புறுதி செய்யப்பட்டவர் 3ஆம் நபரிடமிருந்து நட்டஈட்டைப் பெறு வதற்கோ அல்லது அபாயம் தொடர் பாகப் பல காப்புறுதிப் பத்திரங்க ளைக் கொண்டிருப்பதற்கோ சட்டப் படியான உரிமை கொண்டிருந்தார். இதனால் இத்தகைய சந்தர்ப் பங்களில் அவர் முழு நட்டஈட்டுத் தொகைக்கும் அதிகமாகவும் பெறு வார். இத்தகைய நிலைமையைத் தடுப்பதற்காகவே அதாவது நஷ்ட ஈட்டு உத்தரவாதக் கோட்பாடு மீறப்படுதலைத் தடுப்பதற்காகவே கடன் பற்றுரிமை மாற்றம், பங்களிப்பு என்பன பற்றிய கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

கடன் பற்றுரிமை மாற்றம் என்பது, ஒருவர் இன்னொருவரது ஸ்தானத்தில் இருந்துகொண்டு, அவரது உரிமைகள், அவருக்கான பரிகாரங்கள் தொடர்பாக ஏற்கெனவே அவை வழங்கப்பட்டாலும் சரி வழங் கப்படாவிட்டாலும் சரி அவருக்கு உதவுவதற்கான உரிமையாகும்.

இதன்படி காப்புறுதி செய்யப் பட்டவருக்கு நட்டஈடு வழங்கிய காப்புறுதி வழங்கியவரானவர், வேறு எவ்வழியிலும் எவ்விடத்திலுமிருந்து காப்புறுதி செய்யப்பட்டவர் பெறக் கூடியவற்றை பெறும் உரிமையுடைய வராவர். எவ்வாறாயினும், காப்புறுதி வழங்கியவர் தான் செலுத்திய தொகைக்கு மேலாக பெறும் அள வுக்கு அல்லது இலாபமீட்டுவதற்கு கடன் பற்றுரிமை மாற்ற உரிமையைப் பயன்படுத்த முடியாது என்பது கவனித்தற்பாலது.

(மிகுதி அடுத்த இதழில்)

*நன்றி : காப்புறுதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதித் தொழில் தொடர்பான இலங்கைச் சட்டங்கள்



பேட்டி காணப்படுபவர்-

திரு.க.சிவானந்தம்

சமாதான நீதவான் + உத்தியோகப் பற்றற்ற நீதவான், சட்டத் தரணியும் பிரசித்த நொத்தாரிசும், மன்றாடியார் (இங்கிலாந்து + வேல்ஸ்), மன்றாடியாரும் நியாய துரந்தரும் (அவுஸ்திரேலியா), உரிமையாளர்: சிவானந்தம் அண்ட் அசோசியேற்ஸ்.

K.Sivanandham, JPUM

Attorney - at - law & Notary Public,

Solicitor - England & wales,

Barristor & Solicitor - Australia,

Prop. of Sivanandham & Associates)

பேட்டி காண்பவர் - இனியவன்

**இனியவன்:** மதிப்புக்குரிய சட்ட வல்லுநருக்கு வணக்கம்!

**சிவா:** வணக்கம்!

**இனி.:** முதலில் உங்கள் சட்டத் துறை வரலாறு பற்றிக் கூறுவீர்களா?

**சிவா:** நான் 1956 இல் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சேர்ந்து எனது சட்டக்கல்வியை ஆரம்பித்தேன். முதலாம் வருடப் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியெய்தியதுடன் சித்தியடைந்த மாணவர்களுள் இரண்டாவது இடத்தில் இருந்தேன். பின்னர் இரண்டாம் வருட இடைநிலைப் பரீட்சையிலும் மூன்றாம் வருட முடிவில் இடம்பெற்ற இறுதிப் பரீட்சையிலும் முதலாம் பிரிவில் சித்தியெய்தியதுடன் பட்டியலில் முதலாம் இடத்திலும் வந்திருந்தேன்.

பின்னர் 1960 இல் இலங்கை உயர்நீதிமன்றின் சட்டத்தரணியாகப் பதிவுசெய்யப் பெற்றேன். காலஞ்சென்ற திரு வாரிகர் ஐயர் அவர்களிடம் முதன் முதலாக கனிஷ்ட வழக்கறிஞராகப் பணிபுரிந்தேன். 1961 கார்த்திகை மாதம் தனியாகவே சட்டத் தொழிலைப் புரியத் தொடங்கினேன். 1967 இல் எனக்குக் கிடைத்த இரண்டு சட்டத் துறைகளில் பணி புரிந்தேன். பின்னர் 1972இல் இங்கிலாந்து சென்று சொலிசிட்டர் பரீட்சையில் தேறி, இங்கே சொலிசிட்டராகப் பதிவு செய்து கொண்டேன். பின்னர் இலங்கை திரும்பி எனது தொழிலைத் தொடர்ந்தேன். 1974 இல் சிவானந்தம் அண்ட் அசோசியேற்ஸ் எனும் நிறுவனத்தைத் தனியாகவே ஆரம்பித்தேன். அப்பொழுது 5 சட்டத்தரணிகள் எனது நிறுவனத்தில் என் கீழ் பணி புரிந்தனர். எனது தொழில் தகைமைகள், அனுபவங்கள், செயலாற்றல்களை கணிக்கப்பெற்று 1990 இல் அவுஸ்திரேலியா நீதித்துறையினால் சொலிசிட்டர், பரிஸ்டர் ஆகிய தொழில்சார் தகைமைகள் வழங்கப்பெற்றேன். இதுவரை ஏறக்குறைய 44 வருடங்கள் இத்துறையில் பணியாற்றி இன்றைய பலருக்கு வழிகாட்டியாக எனது பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

**இனி.:** நீங்கள் சட்டம் சார்ந்த விரிவுரைகளை எங்கேயாவது ஆற்றியிருக்கிறீர்களா?

**சிவா:** ஆம், 1968 தொடக்கம் 1989 வரை ஏறக்குறைய 21 வருடங்கள் இலங்கைச் சட்டக் கல்லூரியில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளேன். அத்துடன் நீண்டகாலம் இக்கல்லூரியின் பரீட்சைச் சபையில் (Board of Examination) அங்கத்தவராகப் பணியாற்றியுள்ளேன்.

**இனி.:** தங்கள் சேவைகள் பற்றிக் கூறுவீர்களா?

**சிவா:** ஆம். அரச மொழித் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பு ஆலோசனைக் குழுவில் ஒரு அங்கத்தவராக நீண்டகாலம் பணியாற்றியதுடன் சட்டமொழிபெயர்ப்புக் குழுவினராகவும் பணியாற்றியமையை முக்கியமாகக் குறிப்பிடலாம். மேலும் கௌரவ மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலயம் உட்பட பல இந்து ஆலயங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கும் சட்ட ஆலோசனைகளை வழங்கியுள்ளேன்.

**இனி.:** உங்களின் கீழ் பல சாதனை சட்டத்தரணிகள், அரசியல் பிரமுகர்கள் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள் என அறியக் கிடைக்கின்றது. இது பற்றி...

**சிவா:** 1967 இல் முதன்முதலாக திரு மு. சிவசிதம்பரம் என் கீழ் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். அதன் பின்னர் இதுவரை 200 க்கும் மேற்பட்டோர் என்னிடம் தொழில் பயிற்சி பெற்றுள்ளமை எனக்குப் பெருமையாக உள்ளது. காலஞ்சென்ற முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் போன்றோர் என்னிடம் தொழில் பயிற்சி பெற்றோருள் அரசியல் பிரமுகர்களாயிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் என்னிடம் பயின்ற பலர் சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களத்திலும் மேல் நீதிமன்ற நீதிபதிகளாகவும் பணியாற்றுவதையும் சொல்ல முடியும்.

**இனி.:** இலங்கையில் காலத்துக்குக் காலம் தேவைக்கு ஏற்ப 'காப்புறுதி' தொடர்பான சட்டங்கள் அமுலாக்கப்பட்டிருப்பதை நாம் அறிகிறோம். அவ்வாறானால் இலங்கையின் முதன் முதலாக காப்புறுதி

தொடர்பாக ஆக்கப் பட்ட சட்டம் எது என்றும் எத்தகைய சூழ் நிலைகளில் அச்சட்டம் ஆக்கப் பட்டது என்றும் கூறுவீர்களா?

**சிவா**: 1962 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டமே இலங்கையில் முதன் முதலாக காப்புறுதித் தொழில் தொடர்பாக ஆக்கப்பட்ட சட்டமாகும்.

பொதுவாக இச்சட்டம் ஆக்கப்பட முன்னர் ஏறக்குறைய 100 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பனிகள் இந்நாட்டில் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இவற்றுள் வெளிநாட்டுக் கம்பனிகள் இலாபமாக ஈட்டிய பெருமளவு பணத்தை நாட்டுக்கு வெளியே அனுப்பிக் கொண்டிருந்தன. காப்புறுதியால் நகர்ப்புற, படித்த, பணம் படைத்தவர்களே பயனை அனுபவித்துக் கொண்டிருந்த சூழ்நிலை நிலவிய காலம். நாட்டில் காப்புறுதி பற்றி எந்த வொரு பாராளுமன்றச் சட்டமும் ஆக்கப் படாத நிலை. கிராமப்புற மக்கட்கு காப்புறுதி பற்றியும் அதன் நன்மைகள் பற்றியும் தெரியாத, புரியாத நிலை. 1961 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனச் சட்டத்துடன் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 01.01.1962 தொடக்கம் ஆயுட் காப்புறுதித் தொழிலை நடாத்தும் ஏகபோக உரிமை கொண்ட ஒரு அரச நிறுவனமாகியது. இதனால் இத்திகதி தொடக்கம் இலங்கையில் ஆயுட் காப்புறுதித் தொழில் தேசிய மயமாக்கப் பட்டது.

**இனி.**: அப்படியென்றால் ஏன் பொதுக் காப்புறுதித் தொழில் தேசிய மயமாக்கப்படவில்லை?

**சிவா**: பொதுக் காப்புறுதி பெருமளவில் வர்த்தகம், கைத்தொழிற் சாலைகள் பலவுடன் தொடர் புடையது. இருந்தபோதிலும் 01.01.1964 தொடக்கம் நிதிச் சட்டத்தின் கீழ் பொதுக்காப் புறுதித் தொழிலும் தேசிய மயமாக்கப்பட்டது. இதனால் 01.01.1964 தொடக்கம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எனும் அரச நிறுவனம் இந்நாட்டில் காப்புறுதித் தொழில் நடாத்தும் ஏகபோக உரிமை கொண்ட நிறுவனமாக அமைந்தது.

**இனி.** : பின்னர் காப்புறுதி தொடர்பாக மேலும் பல சட்டங்கள் ஆக்கப் பட்டிருக்கலாம். அத்தகைய சட்டங்கள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் சற்று விளக்குவிர்களா?

**சிவா** : ஆம். பல சட்டங்கள் ஆக்கப் பட்டுள்ளன. முதலாவதாக 1962 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் ஆக்கப்பட்டது. இது தமது வாடிக்கையாளர்களுக்கான காப் புறுதிச் சேவைகளை வழங்கும் தனியார் காப்புறுதி நிறுவனங் களை நிர்வகிக்க உதவியது. மேலும் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்று மதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனச் சட்டம் ஆக்கப் பட்டு அதன் விளைவாக இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப் பட்டது.

அடுத்துத் தனியார்துறையினரின் கோரிக்கை, வற்புறுத்தல் களின் பேரில் 1979 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க காப்புறுதி (விசேட ஏற்பாடுகள் சட்டம்) ஆக்கப் பட்டது. இதன் விளைவாக தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனம் எனும் மற்றுமோர் அரச காப்புறுதி நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதனால் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் இத்துறையில் கொண்டிருந்த ஏகபோக உரிமை இல்லாமல் போனதுடன் இத் தொழிற்றுறையில் போட்டிகரமான சூழ்நிலை ஏற்பட்டது.

**இனி.**: இலங்கைக் காப்புறுதிக் கூட் டுத்தாபனத்தின் இத்தொழில் துறை மீதான ஏகபோக உரிமை முடிவுற்றது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**சிவா**: கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பார்கள். எனவே இக்காப்புறுதித் துறையிலும் இன்னொரு அரச காப்புறுதி நிறுவனம் உருவாக்கப்பட்டமை இத்தொழில் துறையில் ஒரு போட்டிகரமான சூழலை ஏற்படுத் தியது. அத்துடன் இத்தொழில் நன்கு வளர வாய்ப்பும் ஏற்பட்டது. இது மட்டுமன்றி காப்புறுதி செய்வோர்க்கும் சிறந்த சேவை கள் கிடைத்தன. நாட்டில் பல ருக்கு வேலைவாய்ப்புக் கிடைத் தது. மொத்தத்தில் போட்டி நிலவுவது தொழில் வளர்ச்சிக்கு உகந்ததே என எண்ணுகிறேன்.

**இனி.**: இந்நாட்டில் தனியார் துறை யினரும் இத்தொழிலில் ஈடுபடும் வகையில் சட்டங்கள் ஆக்கப் பட்டனவே. அவை பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் கூறுவீர்களா?

**சிவா**: நல்லது. தனியார் துறை யினரைத் திருப்பதிப்படுத்து மளவுக்கு நாட்டிலுள்ள அரச காப்புறுதி நிறுவனங்களால் சேவையாற்ற முடியவில்லை எனக் கருதப்பட்டது. எனவே தனியார் துறையினரின் தொடர்ந்தேர்ச்சி யான கோரிக்கைகள், வற்புறுத் தல்களின் பேரில் காப்புறுதித் தொழிலில் தனியார் துறையினர் க்கும் வாய்ப்பளிப் பதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென வர்த்தக கப்பற்றுறை அமைச்சி னால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவின் சிபார்சின்படி 1986 இல் கீழ்க்காணும் மூன்று சட்டங்கள் இயற்றப்பட்டன.

01) 1982 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கக் காப்புறுதிக் (திருத்த) கட்டுப்பாட்டுச் சட்டம்.

02) 1986 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன (திருத்த)ச்சட்டம்.

03) 1986 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க காப்புறுதித் (விசேட ஏற்பாடு) திருத்தச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டங்கள் இயற்றப்பட்டதன் விளைவாக 01.01.1988 தொடக்கம் மூன்று தனியார் துறைக் காப்புறுதிக் கம்பனிகள் உருவாக்கப்பட்டன.

அவையாவன:

- வரை. சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி
- வரை. யூனியன் அசூரன்ஸ் கம்பனி
- வரை. சீ. ரீ. சீ ஈகிள் காப்புறுதிக் கம்பனி(வரை - வரையறுக்கப்பட்ட)

மேலும் 1986 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கக் காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் (திருத்த) சட்டத்தின் மூலம் காப்புறுதித் தரகு நிறுவனங்கள் பதியப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனவே மேற்படி சட்ட வாக்கங்களின் விளைவாக பல தனியார் துறைக் காப்புறுதிக் கம்பனிகள் தோன்றலாயின. இவற்றை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவுமென காப்புறுதிக் கட்டுப்பாட்டாளர் அலுவலகம் நிறுவப்பட்டதுடன் காப்புறுதிக் கட்டுப்பாட்டாளருக்கு அதிகளவு அதிகாரங்களும் வழங்கப்பட்டன. காப்புறுதித் தரகு நிறுவனங்களும் காப்புறுதிச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அவை வருடாந்தம் காப்புறுதிக் கட்டுப்பாட்டாளரிடம் பதியப்படலும் வேண்டும். சில காப்புறுதிகட்கான தவணைக் கட்டணங்கள் காப்புறுதிக் கட்டுப்பாட்டாளராலேயே நிர்ணயிக்கப்பட்டன. காப்புறுதிப் பத்திரதாரருக்கு கழிவுகள் வழங்கப்படுவது தடைப்படுத்தப்பட்டது. ஒருவர் தனது காப்புறுதிகட்கு தானே முகவராக இருக்க முடியாது. தனியார்துறைக் காப்புறுதி நிறுவனங்கள் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் கட்டாயமாக மறுகாப்புறுதி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டன. முதலீடு, நிர்வாகம், கம்பனிக் கலைப்பு, கணக்கு வைப்பு போன்ற பல விடயங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

**இனி.**: இதுவரை விவரிக்கப்பட்ட (1978ன் 15ம் இல. சட்டம் தவிர) இனி விவரிக்கப்படும் சட்டங்களுக்கு விதிவிலக்காகச் செயற்படும், அதாவது இவற்றின் கட்டுப்பாட்டுக்குள் வராத காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் எவையேனும் உண்டா?

**சிவா**: ஆம். 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்று மதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை ஏற்று மதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க விவசாய கமத் தொழிற் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டவிவசாய, கமத் தொழில் காப்புறுதிச்சபை அடுத்து 1996 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பெரும்பாக கொழும்பு பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தின் கீழ் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நிறுவனங்கள்யாவும் முன்னர் கூறிய சட்டங்களினால் ஆளப்படாது விதிவிலக்குப் பெற்றவையாகும்.

**இனி.**: நல்லது. இறுதியாக ஆக்கப்பட்ட சட்டம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் விளக்குவது இலங்கையில் காப்புறுதித் தொழிலின் இன்றைய நிலையை அறிய உதவும் என நினைக்கின்றேன். இது பற்றித் தெளிவு படுத்த முடியுமா?

**சிவா**: 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தற் சட்டமே காப்புறுதித் தொழில் தொடர்பாக இந்நாட்டில் இறுதியாக ஆக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் மூலம் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமாக இலங்கைக் காப்புறுதிச் சபை இச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபை இந்நாட்டில் காப்புறுதித் தொழில் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் பூரண பொறுப்பைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதித் தரகு நிறுவனங்கள்யாவும் இச் சபையில் பதிவு செய்யப்படல் வேண்டும். காப்புறுதி வெளிக்கள ஊழியர்களின் தரத்தைப் பேணும் வகையில் அவர்களுக்கான தகைமைகள் அரசவர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. அத்துடன் இலங்கைக் காப்புறுதி நிறுவனத்தினால் இவர்கட்கான அனுமதிப் பரீட்சையை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இச்சட்டத்தின் கீழ் காப்புறுதிப் பத்திரதாரர் பாதுகாப்பு நிதியமும் ஏற்படுத்தப்பட்டது. தேவையேற்படுமிடத்து குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென குழுவை நியமிக்கும் அதிகாரமும் இச் சபைக்குண்டு. மறுகாப்புறுதி தொடர்பான தேசியக் கொள்கையை வகுப்பதற்கான ஆய்வும் இச்சபையால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தேசிய சுகாதாரக் காப்புறுதிக் கொள்கையை வகுக்கவென இச்சபையால் குழுவொன்றும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடற்பாலது.

**இனி.**: நன்றி. நீங்கள் உலகின் முக்கிய பல நாடுகட்கெல்லாம் சென்றிருக்கின்றீர்கள். காப்புறுதித் தொழிலைப் பொறுத்தவரை அந்நாடுகட்கும் இலங்கைக்குமிடையே நீங்கள் காணும் வேறுபாடுகளைச் சற்று விளக்குவீர்களா?

**சிவா**: ஆம். நான் இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஹொங்கொங், தாய்லாந்து, ரஷ்யா, இந்தியா போன்ற பல நாடுகட்கெல்லாம் சென்றுள்ளேன். பொதுவாக இந்நாடுகளில் மக்கள் யாவரும் தம் உயிர், உடைமைகளையெல்லாம் காப்புறுதி செய்துள்ளதைக் காணமுடிகிறது. ஆனால் இலங்கையில் இந்நிலை குறை வாகவே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இனி.**: இவ்வாறு வளர்ச்சியடைந்த நாடுகளில் காப்புறுதித்துறை வளர்ந்தும் இலங்கையில் வளரா மலும் இருப்பதற்கான காரணங் கள் எதுவாக இருக்குமென நீங்கள் எண்ணுகிறீர்கள்?

**சிவா**: இலங்கையைப் பொறுத்தவரை இந்நாட்டில் வாழ்பவர்கட்கு காப்புறுதி பற்றிய அறிவு மிகக் குறைவாக உள்ளது. அத்துடன் இதுபற்றி அறிவூட்டும் நடவடிக் கைகளும் போதுமானவையல்ல. காப்புறுதி செய்யப்பட்டவற்றின் நட்டம் அல்லது சேதம் தொடர் பாக உரிய நட்ட ஈட்டை பெறு வதில் பல கஷ்டங்கள், கால தாமதங்கள் ஏற்படுகின்றமையும் இது வளராமைக்கு முக்கிய காரணம் எனலாம். வெளிநாடு களைப் பொறுத்தவரை நிலை முற்றிலும் வேறு. மேலும் வெளிநாடுகளில் பெரும்பாலான பொருட்கள் ஈடு, குத்தகை மூலம் பெறப்படுவதால் உரிய கம்பனி களே கட்டாயக் காப்புறுதிகளை வலியுறுத்துகின்றமையும் இத் தொழில் அந்நாடுகளில் வளர உதவுகின்றது.

**இனி.**: நீங்கள் காப்புறுதி சம்பந்தமான வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறீர்களா?

**சிவா**: ஆமாம், பெரும்பாலும் மோட் டார் அபாயக் காப்புறுதியின் கீழ் விபத்து தொடர்பான வழக்கு களிலும் ஆயுட் காப்புறுதியின் கீழ் முக்கிய விடயத்தை வெளிப் படுத்தாமை தொடர்பான வழக்கு களிலும் ஈடுபட்டுள்ளேன்.

**இனி.**: பெரும்பாலும் எத்தகைய காப்புறுதி வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன?

**சிவா**: மோட்டாரபாயக் காப்புறுதியின் கீழ் விபத்து சம்பந்தப்பட்ட வழக்குகளே அதிகமாகும். மேலும் தீயபாயக் காப்புறுதி, கடலபாயக் காப்புறுதி மற்றும் ஆயுட் காப்புறுதி என்பன தொடர்பாகவும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. பெரும்பாலும் 'முக்கிய விடயத் தைக் கூறாமை' (Non-disclosure of Material Facts) என்பதன் அடிப் படையில் உரிமைக் கோரிக் கைகள் மறுக்கப்படுமிடத்து பாதிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திர தாரர்கள் பேரில் நாம் வழக்காட வேண்டியுள்ளது.

**இனி.**: 'கட்டாய ஆயுட் காப்புறுதி' எனச் சட்டம் கொண்டு வருதல் சிறந்தது எனக் கருதுகிறீர்களா?

**சிவா**: ஆமாம். ஏனெனில் கவனயீன மாக வாகனங்களைப் பலர் ஓட்டுவதால் பல விபத்து மரணங் கள் ஏற்படுவதை நாம் காண்கின் றோம். இதனால் பாதிக்கப்பட்ட வருக்கும் அநாதை நிலைக்குத் தள்ளப்படும் குடும்பங்கட்கும் கட் டாயக் காப்புறுதி கைகொடுத்து தவும்.

**இனி.**: இதுவரை தங்கள் உயிர் உடைமைகளைக் காப்புறுதி செய்யாதவர்கட்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**சிவா**: களவு, விபத்து காரணமாக தினமும் இழப்புக்களைக் காண முடிகிறது. அதுமட்டுமல்ல, இயற்கை அனர்த்தங்களாலும் பலர் முற்றாக தமது இருப்புக் களையெல்லாம் இழக்கின்றனர். எனவே யாவரும் தங்கள் உயிர் உடைமைகளையெல்லாம் காப் புறுதி செய்வதே புத்திசாலித்தன மானது.

**இனி.**: புதிய சட்டத்தரணிகட்கு நீங்கள் கூறும் அறிவுரை....

**சிவா**: நேர்மை, கடும் உழைப்பு, எளிதில் மக்கள் சந்திக்கக் கூடி யமை, இத்துறையில் மிகுந்த ஈடுபாடு, இத்துறை பற்றிய பூரண அறிவு - இவையாவும் இருந்தால் ஒருவர் இத்துறையில் நன்கு பிரகாசிக்கலாம். வாழ்க்கையும் சிறப்பாக அமையும்.

**இனி.**: நீங்கள், உங்கள் குடும்பத்த வர்கள் யாவரும் சந்தோசமாகவே வாழ்கின்றீர்கள் என நினைக் கின்றேன்.

**சிவா**: ஆம். மிகவும் சந்தோசமாகவே வாழ்கின்றோம். எனக்கு இரண்டு குழந்தைகள். மகள் இலண்டனில் டாக்டராகப் பணி புரிகிறார். மகன் இலண்டனி லேயே கணக்கா ளராகப் பணிபுரிகின்றார். இருவரும் அங்கேயே நிரந்தரமாக வாழ் கின்றனர்.

**இனி.**: உங்கள் சட்டத்துறை வர லாற்றில் மறக்க முடியாத சம்பவம்.

**சிவா**: காலஞ்சென்ற முன்னாள் ஜனா திபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா பிரதமராக இருந்தபோது அவ ருக்கு எதிராக திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மறுபுறம் பல இராணி வழக்குரை ஞர்கள் ஆஜராகி சமர்ப்பித்த ஆரம்ப எதிர்ப்புரை சம்பந்தமாக, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா தரப்பில் நான் ஆஜாராகி மறுப்புரை சமர்ப்பித்து வெற்றி பெற்றதே என்னால் மிகவும் மறக்க முடியாத சம்பவமாகும்.

**இனி.**: இப்பேட்டிமூலம் அரிய பல கருத்துக்களைத் தந்துதவிய மைக்கு 'காப்புறுதி உலகம்' சஞ்சிகை சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம். நன்றி. வணக்கம்.

**சிவா**: நன்றி. வணக்கம்

---

*ஆசிரியர் குறிப்பு: -*

*வருமுன் காப்போம் எனும் தொனிப்பொருளில் வெளியிடப்பட்ட நூல்கள் விமர்சனத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும். விரும்புவோர் அத்தகைய நூல்களின் இரண்டு பிரதிகளை தயவுசெய்து எமக்கு அனுப்பி வையுங்கள்.*

---

**"ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**ஆயுட்காப்புறுதியோ வாழ்வுக்குறுதி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்
# புதிய காப்புறுதிச் சட்டவாக்கம் + காப்புறுதிச் சபை



- திரு. மு. கணபதிப்பிள்ளை, [illegible]
ஆலோசகர் - இலங்கைக்காப்புறுதிச்சபை

இலங்கையின் தேசியமயமாக்கப்பட்ட காப்புறுதித் தொழிலானது இருபாட்டில் தனியாரும் காப்புறுதித் தொழிலை நடாத்துவதற்கு ஏற்றவாறு 1962ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க காப்புறுதிச் சட்டம் திருத்தப்பட்டதன் மூலம் இலங்கை அரசாங்கத்தினால் 1986 இல் தாராளமயமாக்கப்பட்டது. இத்தாராளமயமாக்கலுடன் மூன்று பல்சேர்வை தனியார்துறைக் காப்புறுதிக் கம்பனிகள் நிறுவப்பட்டதுடன் அவை ஆயுள் மற்றும் பொதுக்காப்புறுதிகளை வழங்கி இருபெரும் காப்புறுதி நிறுவனங்களுடன் போட்டி போட்டனவாயின. ஆரம்பத்தில் காப்புறுதிக் கம்பனிகளில் வெளிநாட்டு முதலீட்டு ஈடுபடுத்துகையானது ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலேயே அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டது.

காப்புறுதிக் கம்பனிகள் நிதியமைச்சின் காப்புறுதிக் கட்டுப்பாட்டாளரால் ஒழுங்குபடுத்தப்பட்டன.

தாராளமயமாக்கப்பட்ட காப்புறுதித் தொழிலை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதும் காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்ட ஏற்பாடுகள் போதாதென அரசாங்கம் கருதியது. இதனால் சிங்கப்பூர், மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டங்களின் அடிப்படையில் புதிய சட்டவாக்க வரைவுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்கக் காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டமானது 2000ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் 2001 பங்குனி 1ஆம் திகதி இலங்கைக் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டது. அத்துடன் இச்சபை காப்புறுதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து காப்புறுதி ஒழுங்குபடுத்தல் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டது. இலங்கைக் காப்புறுதிச்சபை ஏழு (7) அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதுடன் இவர்களுள் மூன்று (3) பதவி வழி அங்கத்தவர்களாவர். ஏனைய நான்கு (4) அங்கத்தவர்களும் நிதியமைச்சரால் நியமிக்கப்படுபவர்களாவர்.

அமைச்சர் சபை அங்கத்தவர்களுள் ஒருவரை சபையின் தலைவராக நியமிப்பார். பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான இலங்கைக் காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் நாயகம் சபையின் சம்மதத்துடன் நிதியமைச்சரால் நியமிக்கப்படுவார்.

இலங்கையின் காப்புறுதித் தொழிலானது காப்புறுதிப் பத்திரதாரர் அத்துடன் காப்புறுதிப் பத்திரதாரர்களாக உள்ளவர்களது பாதுகாப்புக் கருதி நேர்மையாகவும் உயர் தொழில் நிலையிலும் விவேகமான முறையிலும் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதே காப்புறுதிச் சபையின் நோக்கமாகவும் கடமையாகவும் இருக்கும்.

இலங்கையில் காப்புறுதித் தொழிலை நடாத்தும் நிறுவனமாக செயற்படுவதாயின் இலங்கைக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுற்ற கம்பனியாக கூட்டிணைக்கப்படுவதுடன் காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் காப்புறுதி நிறுவனமாகவும் பதிவு செய்யப்படல் வேண்டும். காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பதினைந்து (15) கம்பனிகள் உள்ளன. இவற்றுள் பதின் மூன்று (13) கம்பனிகள் நீண்டகாலக் காப்புறுதித் தொழில் மற்றும் பொதுக்காப்புறுதித் தொழில் ஆகிய இரண்டிலும் ஈடுபட்டுள்ள கலப்புக் காப்புறுதிக் கம்பனிகளாகும். இவை தவிர இன்னுமொரு கம்பனி நீண்டகாலக் காப்புறுதித் தொழிலிலும் மற்றையதோர் கம்பனி பொதுக் காப்புறுதித் தொழிலிலும் மட்டும் ஈடுபட்டுள்ளன.

### காப்புறுதிக் கம்பனிகளில் வெளிநாட்டு முதலீட்டும் பங்குபற்றுகை

பூகோளமயமாக்கல் எனும் நெடும் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கம் காப்புறுதிக் கம்பனிகளில் வெளிநாட்டு முதலீட்டை 100 சதவீதம் வரை தாராளமயமாக்கியுள்ளது. ஹேலீஸ் ஏஐஜீ காப்புறுதிக் கம்பனியில் அமெரிக்க சர்வதேசக்குழுவானது பெரும் பங்குகளைக் கொண்டுள்ளது. இந்திய ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது வரையறுக்கப்பட்ட ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் (இலங்கை) முக்கிய பங்குகளைக் கொண்டுள்ளது. ஆனால் சென்ற வருடம் பொதுக் காப்புறுதியில் ஈடுபடுவதற்கு இலங்கை காப்புறுதிச் சபையால் பதிவுசெய்யப்பட்ட அலியான்ஸ் காப்புறுதிக் கம்பனியானது ஜேர்மனியின் அலியான்ஸ் குழுமத்தின் ஓர் துணைக் கம்பனியாகும். இக் கம்பனியின் 100 சதவீதம் அலியான்ஸ் குழுமத்தின் முதலீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் தனியார் மயப் படுத்தல் திட்டத்தின் பிரகாரம் பூரண அரச உடைமைகளாகவிருந்த தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனமும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் தனியார் மயப்படுத்தப்பட்டதுடன் இரு கூட்டுத்தாபனங்களுமே தனியார் துறைக் கம்பனிகளால் உடைமை யாக்கப்பட்டன. இப்பொழுது நீண்ட கால (ஆயுள்) மற்றும் பொதுக்காப் புறுதித் தொழில் இரண்டையும் அல் லது ஒன்றை மட்டும் மேற்கொண் டுள்ள சகல காப்புறுதி நிறுவனங்க ளும் தனியார் கம்பனிகளாக இருப்ப துடன் இவற்றில் ஏதேனும் ஒரு கம்பனியிலாவது அரசுக்கு எந்தவித பங்கும் இல்லை.

### கடன்தீர் சக்தி எல்லை தொடர்பான விதிகளின் அறிமுகம்

காப்புறுதித் தொழில் ஒழுங்கு படுத்தற் சட்டத்தால் இலங்கைக் காப்புறுதிச்சபைக்கு உரித்தாக்கப் பட்ட அதிகாரங்களின்படி இலங்கைக் காப்புறுதிச் சபையால் நீண்டகால காப்புறுதித் தொழிலுக்கும் பொதுக் காப்புறுதித் தொழிலுக்கும் உரிய ஆகக்குறைந்த கடன்தீர் ஆற்றல் எல்லை பற்றிய விதிகள் இயற்றப் பட்டன. ஆயுட்காப்புறுதித் தொழிலில் ஈடுபடும் காப்புறுதிக் கம்பனிகட்கு ஆகக்குறைந்தளவு கடன்தீர் ஆற்றல் எல்லை பற்றிய தேவைப்பாடு இலங் கையில் இப்பொழுது முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

நீண்டகாலக் காப்புறுதித் தொழி லில் ஈடுபட்ட காப்புறுதிக் கம்பனிகள் நீண்டகாலக் காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பான ஆயுட்கணிப்புப் பொறுப் புக்களினின்றும் 5% கடன் தீர் ஆற் றல் எல்லையைக் கொண்டிருக்க வேண்டும் என தேவைப்படுத்தப்பட் டன. பொதுக்காப்புறுதியைப் பொறுத் தவரை காப்புறுதிக் கம்பனிகள் 500 இலட்சம் ரூபாவுக்குக் குறையாத தொகை அல்லது தேறிய தவணைக் கட்டணத் தொகையில் 20% த்திற்கு சமனான தொகை அல்லது நடப்பு ஆண்டிலிருந்து கடந்த மூன்று ஆண்டு களின்போது நிலுவையாகவிருந்த உரிமைக் கோரிக்கைகளில் 40% த்திற்குச்சமனான தொகை இவற்றுள் எது கூடியதோ அத்தொகையைக் கடன்தீர் ஆற்றல் எல்லையாக் கொண்டிருத்தல் வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றன.

### காப்புறுதி இறுப்பு முறை (Tariff system)

வேலையாளர்களின் நட்டஈட்டுக் காப்புறுதிக்கு மட்டும் இறுப்பு தற்ச மயம் நடைமுறையில் இருக்கின்றது. இறுப்பு வீதத்தைத் தீர்மானிப்பதற்கு இலங்கைக் காப்புறுதிச் சபைக்கு காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத் தல் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மோட்டாரபாயக் காப்புறுதிக்கான இறுப்பு 2003 ஆம் ஆண்டு தை மாதம் (ஜனவரி) 1ஆம் திகதி நீக்கப்பட்டது. தீயபாயக் காப்புறுதிக்கான இறுப்பு 2005 ஆம்ஆண்டு தை மாதம் (ஜனவரி) 1ஆம் திகதி நீக்கப்பட்டது.

### மறுகாப்புறுதி ( Reinsurance)

இலங்கையில் எந்தவொரு மறு காப்புறுதிக் கம்பனியும் இல்லை. இந் நாட்டின் காப்புறுதிக் கம்பனிகள் யாவும் வெளிநாட்டு மறுகாப்புறுதி யாளர்களிடமிருந்தே தமது மறு காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இலங்கைக் காப்புறுதிச் சபையின் வழிகாட்டுகையின்படி மறுகாப்புறுதியாளர்கள் அங்கீகரிக் கப்பட்ட தரப்படுத்தல் முகவரமைப்பு களினால் வழங்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச்சபை ஏற்கக்கூடிய தரத் தைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், தமது அரசாங்கங்களினால் உத்தரவாதப் படுத்தப்பட்ட அரசாங்க மறுகாப்புறுதி நிறுவனங்களைப் பொறுத்தவரை இத்தேவைப்பாடு எதிர் பார்க்கப்படுவதில்லை. காப்புறுதிக் கம்பனிகள் தாம் காப்புறுதி வழங்கிய இடங்களில் ஏறத்தாள 60 சத வீதத்தை தம்மகத்தே வைத்திருக் கின்றன.

### தொழில் நிறைவேற்றம்

காப்புறுதித் தொழில் தாராளமய மாக்கப்பட்டதன் பின்னர் இத்துறை யில் வருடாந்த வளர்ச்சி வீதம் 15 தொடக்கம் 20 சதவீதம் வரை காணப்படுகின்றது. மொத்த தேசிய உற்பத்தியின் விகிதாசாரமாக தவ ணைக்கட்டண வருமானத்தின் ஊடுரு வல் விகிதம் 2000ஆம் ஆண்டின் 1.18% த்திலிருந்து 2004 இல் 1.52% ஆக அதிகரித்ததன் மூலம் இது வெளிக்காட்டப்பட்டுள்ளது. சனத் தொகை விகிதாசாரப்படி ஆயுட்காப்பு றுதிப் பத்திரதாரர்களின் அதிகரிப்பு வீதமானது ஏறத்தாள 5.9 % மாக உள்ளது. இது ஆயுட் காப்புறுதித் துறை மேலும் வளர்ச்சியடையக் கூடியமையையே எடுத்துக் காட்டு கின்றது. காப்புறுதிக் கம்பனிகள் இதுவரை காப்புறுதி செய்யப்படாத வர்களை காப்புறுதி செய்ய வைக்கும் புதுப்புது ஆயுட் காப்புறுதித் திட்டங் களை அறிமுகப்படுத்துதல் வேண் டும். 2004 மார்கழி 31இல் முடிவுறும் ஆண்டுக்கான எழுதப்பட்ட மொத்த தவணைக்கட்டணம் 2,95,550 இலட் சம் இலங்கை ரூபாக்களாகும். எழுதப்பட்ட மொத்த தவணைக் கட்டணத்தில் 58 சதவீதத்தை பொதுக்காப்புறுதித் துறையும் 42 சதவீதத்தை நீண்டகாலக் காப்புறுதித் துறையும் கொண்டுள்ளன.

நீண்ட காலக் காப்புறுதித் தொழில் மற்றும் பொதுக்காப்புறுதித் தொழில் தொடர்பான 2004ஆம் ஆண் டுக்கான தொழில் நிறைவேற்றம் முறையே 1 ஆம், 2ஆம் அட்டவணை களில் தரப்பட்டுள்ளன.

### காப்புறுதித் தரகர்கள்

காப்புறுதித் தொழில் தாராளமய மாக்கப்பட்டதுடனும் 1986 இல் இலங்கையில் தரகர் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. காப்புறுதித் தரகு நிறுவனங்கட்கான அனுமதி இலங்கைக் காப்புறுதிச் சபையால் வழங்கப்படுவதுடன் இப்பொழுது 54 பதிவு செய்யப்பட்ட தரகு நிறுவனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை 1

**நீண்டகாலக் காப்புறுதித் தொழில்**
**எழுதப்பட்ட மொத்த தவணைக்கட்டணம்-2004**

| கம்பனி | தவணைக்கட்டணம் ரூ '000 (ஆயிரம் ரூபாவில்) | சந்தைப்பங்கு (%) |
|---|---|---|
| வரை. இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் | 3,331,583 | 26.62 |
| வரை. சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி | 3,961,390 | 31.65 |
| வரை. ஈகிள் காப்புறுதிக் கம்பனி | 2,500,131 | 19.97 |
| வரை. யூனியன் அசூறன்ஸ் | 1,209,534 | 9.66 |
| வரை. ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி | 532,643 | 4.26 |
| வரை. ஏசியன் அலையன்ஸ் காப்புறுதிக் கம்பனி | 421,280 | 3.37 |
| வரை. தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 136,128 | 1.09 |
| வரை. எச்.என்.பீ. அசூறன்ஸ் | 205,883 | 1.64 |
| வரை. கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி | 51,610 | 0.41 |
| வரை. அமனா தஹா∴புல் | 60,658 | 0.48 |
| வரை. ஹேலீஸ் ஏ.ஐ.ஜீ காப்புறுதிக் கம்பனி | 19,342 | 0.15 |
| வரை. ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) | 82,127 | 0.66 |
| வரை. புறுடென்சியஸ் அசூறன்ஸ் | - | - |
| வரை. சனச அல்மாஓ காப்புறுதிக் கம்பனி | 5,245 | 0.04 |
| மொத்தம் | 12,517,554 | 100.00 |

### அட்டவணை 2

**பொதுக் காப்புறுதித் தொழில்**
**மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் -2004**

| கம்பனி | தவணைக்கட்டணம் ரூ.1000 | சந்தைப்பங்கு (%) |
|---|---|---|
| வரை. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 5,303,104 | 31.13 |
| வரை. சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி | 5,580,643 | 32.76 |
| வரை. ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி | 2,443,808 | 14.34 |
| வரை. யூனியன் அசூறன்ஸ் | 1,302,894 | 7.65 |
| வரை. ஈகிள் காப்புறுதிக் கம்பனி | 1,058,025 | 6.21 |
| வரை. ஏசியன் அலையன்ஸ் கம்பனி | 310,400 | 1.82 |
| வரை. தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 40,200 | 0.24 |
| வரை. எச்.என்.பீ. அசூறன்ஸ் | 338,708 | 1.99 |
| வரை. ஹேலீஸ் ஏ.ஐ.ஜீ. காப்புறுதிக் கம்பனி | 318,254 | 1.87 |
| வரை. கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி | 157,741 | 0.93 |
| வரை. அமனா தஹ.∴புல் | 183,581 | 1.08 |
| வரை. சனச அல்மா ஓ காப்புறுதிக் கம்பனி | - | - |
| வரை. அலியான்ஸ் காப்புறுதிக் கம்பனி | - | - |
| வரை. புறூடென்சியல் அசூறன்ஸ் | - | - |
| மொத்தம் | 17,037,538 | 100.00 |

கள் உள்ளன. சகல காப்புறுதிக் கம்பனிகளின் பேரிலும் காப்புறுதி செய்வோரை சேர்ப்பதற்கான அனுமதி காப்புறுதித் தரகு நிறுவனங்கட்கு வழங்கப்பட்டுள்ளது. காப்புறுதித் தரகு நிறுவனங்களுள் பெரும்பாலா னவை பொதுக் காப்புறுதித் தொழிலிலேயே ஈடுபாடு காட்டுவதுடன் 2004 க்கான மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் ஏறத்தாள 24% இவற்றின் பங்களிப்பாகும். இதற்கு மாறாக, நீண்டகாலக் காப்புறுதித் தொழிலுக்கான இவற்றின் பங்களிப்பு 1% த்திற்கும் குறைவாகக் காணப்படு கிறது.

### காப்புறுதி முகவர்கள்

காப்புறுதி முகவர்கட்கான அங்கீகாரம் இலங்கைக் காப்புறுதிச் சபையால் வழங்கப்படுவதில்லை. இருப்பினும், காப்புறுதி நிறுவனங்க ளாலும் காப்புறுதித் தரகு நிறுவனங்க ளினாலும் காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ள புதியவர்களின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இலங்கைக் காப்புறுதிச் சபை சில விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்விதிப்படி, அவர்கள் ஆகக் குறைந்தளவு குறிப்பிட்ட கல்வித் தகைமையைக் கொண்டிருப்பதுடன் தேர்வுக்கு முன்னரான பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். தேர்வுக்கு முன்னரான பரீட்சையானது இலங் கைக் காப்புறுதி நிறுவனத்தினால் இலங்கைக் காப்புறுதிச் சபையின் இணக்கத்துடன் உருவாக்கப்பட்ட பாடவிதானத்தின் அடிப்படையில் நடாத்தப்படுகிறது.

### காப்புறுதித் துறைச் சங்கங்கள்

காப்புறுதித் தொழிலை பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் இலங்கைக் காப்புறுதிச் சங்கம், இலங்கைக் காப்புறுதித் தரகர் சங்கம் எனும் இரண்டு சங்கங்கள் செயற்படுகின்றன. சகல காப்புறுதி நிறுவனங்களும் இலங்கைக் காப்புறுதிச் சங்கத்தின் அங்கத்துவம் பெற்றவையாகும். காப்புறுதித் தரகு நிறுவனங்களைப் பொறுத்தவரை அவை காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்ட விதிப்பிரமாணங்களின்படி இலங்கைக் காப்புறுதிச் சபையால் அங்கீகரிக் கப்பட்ட காப்புறுதித் தரகர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் சட்டரீதி யான கடப்பாடாகும். இலங்கைக் காப்புறுதித் தரகர்சங்கம் இலங்கைக் காப்புறுதிச் சபையால் அங்கீகரிக்கப் பட்ட ஒரேயொரு சங்கமாகையால் காப்புறுதித் தரகு நிறுவனங்கள் யாவும் அதில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

இலங்கைக் காப்புறுதிச் சபை யானது காப்புறுதித் தொழிலை ஓர் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நோக்குடன் சுய ஒழுக்காற்று அணுகுமுறையை புகட்டுவதில் இவ்விரண்டு சங்கங்களுடனும் இணைந்து செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

**காப்புறுதிப்பத்திரதாரர் பாதுகாப்பு நிதியமும் வரி அறவிடுகையும்**

காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் தனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் படி நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட விதிப்பிரமாணங்களின் பிரகாரம் தேறிய நீண்டகால எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் 0.2% மும் தேறிய எழுதப்பட்ட பொதுக்காப்புறுதி தவணைக்கட்டணத்தில் 0.4% மும் வரியாக அறவிடப்படுகின்றது. இவ் வரி அறவிடுகைமூலம் பெறப்பட்ட பணம் யாவும் காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இலங்கைக் காப்புறுதிச் சபையால் ஏற்படுத்தப்பட்ட காப்புறுதிப் பத்திரதாரர் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதுடன் காப்புறுதிப் பத்திரதாரர்களின் பாதுகாப்புக்கும் மற்றும் இலங்கைக் காப்புறுதிச் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏனைய விசேட நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

**வேலை நிறுத்த, கலவர, உள்நாட்டுக் குழப்ப, பயங்கரவாத நிதியம்** (SRCC & T fund)

வேலை நிறுத்தம், கலகம், குடிக்கொந்தளிப்பு, பயங்கரவாதம் (வே.க.கு.கொ.ப) ஆகியவற்றின் நிமித்தம் ஏற்படும் அபாயங்களுக்கு எதிராக மீள்காப்புறுதிப் பாதுகாப்பை மீள் காப்புறுதியாளர்களிடமிருந்து பெறுவதற்கு காப்புறுத்துவோர்கள் கஷ்டத்தை எதிர்நோக்கியதன் காரணமாக 1987ம் ஆண்டில் அரசாங்கமானது வே.க.கு.கொ.ப நிதியத்தை நிறுவியது. இவ் இடர்கள் தொடர்பாக காப்புறுதி நிறுவனங்களினால் அறவிடப்பட்ட தவணைக் கட்டணங்கள் அந் நிறுவனங்களினால் இந்நிதியத்திற்குச் செலுத்தப் படுகின்றன.

**காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தற் சட்ட ஏற்பாடுகளினின்றும் விதிவிலக்களிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள்**

இரு அரசாங்கக் காப்புறுதி நிறுவனங்களான இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் விவசாய, கமத்தொழிற் காப்புறுதிச் சபை என்பன காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளன. மேலும் இவ்விரு நிறுவனங்களும் இலங்கைக் காப்புறுதிச் சபையின் ஒழுங்குபடுத்தல் அதிகாரப் பரப்பின் கீழ் வருவனவுமல்ல.

❖❖❖

# காப்புறுதிச் சொல்லகராதி

இச் சொல்லகராதியில் இடம்பெறும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் இந்நாட்டில் நீண்ட காலப் பாவனையில் உள்ளவை எனலாம். எனினும் இவற்றை ஏற்றுக்கொள்ளாதோர் எவரேனும் இருப்பின் மறுப்பதற்கான காரணத்தை விளக்குவதுடன் தாம் சரியெனக் கருதும் சொற்பதங்களையும் குறித்து எழுத்துமூலம் எமக்கு அறியத்தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம். - ஆசிரியர்.

1. Insurance World - காப்புறுதி உலகம்
2. Insurance - காப்புறுதி
3. Insurance policy - காப்புறுதிப் பத்திரம்
4. Insurance contract - காப்புறுதி ஒப்பந்தம்
5. Insurer - காப்புறுதியாளர்/காப்புறுதி வழங்குநர்/காப்புறுத்துவோர்
6. Insured - காப்புறுதி செய்யப்பட்டவர்
7. Insurance policy Holder - காப்புறுதிப் பத்திரதாரர்
8. Insurance Agent - காப்புறுதி முகவர்
9. Insurance organiser - காப்புறுதி அமைப்பாளர்
10. Insurance company - காப்புறுதிக் கம்பனி
11. Insurance corporation - காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
12. Insurance Broker - காப்புறுதித் தரகர்
13. Insurance Brokering Company - காப்புறுதித் தரகுக் கம்பனி
14. Insurance Concept - காப்புறுதிக் கோட்பாடு
15. Insurable Interest - காப்புறுத்தகு நலவுரித்து
16. Utmost goodfaith - அதிஉயர் நன்நம்பிக்கை
17. Indemnity - நட்டஈடு
18. Subrogation - உரிமை மாற்றம்
19. Contribution - பங்களிப்பு
20. Proximate cause - அண்மித்த காரணம்

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி நிறுவனங்கள்

## இலங்கையின் காப்புறுதி நிறுவனங்கள், அமைப்புக்கள்

இன்றைய இலங்கையில் காப்புறுதித் தொழிலை நடாத்தும் நிறுவனங்களையும் இத்துறையின் நிர்வாகம், மேற்பார்வை, பயிற்சி, வளர்ச்சி போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களையும் நாம் காணலாம். காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை அரச காப்புறுதி நிறுவனங்கள், தனியார் காப்புறுதி நிறுவனங்கள் என இரு வகைப்படுத்தலாம். இத்தகைய நிறுவனங்கள், அமைப்புக்களின் முகவரிகள், தொலைபேசி எண்கள் என்பன பொதுமக்கள் நலன்கருதி கீழே தரப்படுகின்றன :-

## 1. காப்புறுதி அமைப்புக்கள்

**1. காப்புறுதி குறைகேள் அதிகாரி அலுவலகம்,**
143ஏ, வஜிரா வீதி, கொழும்பு - 05.
☎ : **2595625, 4528671, தொலைமடல்: 2595624, 4528670.**

**2. இலங்கைக் காப்புறுதிச் சபை**
தளம் 07-02, கிழக்குக் கோபுரம்,
உலக வர்த்தக நிலையம்,
கொழும்பு-01. ☎ : 2396184.

**3. இலங்கைக் காப்புறுதி நிறுவனம்,**
இல. 143, சாந்த மைக்கல் வீதி,
கொழும்பு-03. ☎ : 2451426

*(இவை தவிர இலங்கைக் காப்புறுதிச் சங்கம், இலங்கைக் காப்புறுதித் தரகர் சங்கம் என்பனவுமுண்டு)*

## 2. காப்புறுதித் தொழில் நிறுவனங்கள்

### 1. அரச காப்புறுதி நிறுவனங்கள்

**1. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
4ஆம் தளம்,
இல. 42, நவம் மாவத்தை,
கொழும்பு-02. ☎ : 4719410.

**2. விவசாய கமத்தொழிற் காப்புறுதிச் சபை,**
இல.100, நவம் மாவத்தை, கொழும்பு-02
☎ : 2448693

### 2. தனியார் காப்புறுதி நிறுவனங்கள்

**1. வரை. அலியான்ஸ் இலங்கைக் காப்புறுதிக் கம்பனி**
103/7, காலி வீதி,
கொழும்பு-03. ☎ : 5340555

**2. வரை. அமனா தகா:புல்**
98, பௌத்தாலோக வீதி,
கொழும்பு-04. ☎ : 2597430

**3. வரை. ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை)**
சார்நெல் கட்டிடம்
29/2, விசாகா வீதி,
கொழும்பு-04. ☎ : 5334353

**4. வரை. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.**
21, வொக்சோல் வீதி,
கொழும்பு-02. ☎ : 2435301-4

**5. வரை. ஈகிள் காப்புறுதிக் கம்பனி**
'ஈகிள் இல்லம்'
75, குமாரன் இரத்தினம் வீதி,
கொழும்பு-02. ☎ : 2310100

**6. வரை. எச்என்பீ அசூறன்ஸ்**
2ஆவது மாடி,
ஏச்என்பீ கட்டிடம்
10, சிறீ உத்தரானந்த ஒழுங்கை
கொழும்பு-03 ☎ : 2436182

**7. வரை. ஏசியன் அலையன்ஸ் காப்புறுதிக் கம்பனி**
7ஆவது மாடி,
மில்லேனியம் இல்லம்,
46/58, நவம் வீதி,
கொழும்பு-02. ☎ : 2314444



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. வரை. ஹேலீஸ் ஏஜஜீ காப்புறுதிக் கம்பனி**
17ஆவது தளம்,
இலங்கை வங்கி வர்த்தக கோபுரம்,
28, சாந்த மைக்கேல் வீதி,
கொழும்பு-03. ✆ : 2382266

**9. வரை. கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி**
455, காலி வீதி,
கொழும்பு-03. ✆ : 2556567

**10. வரை. சனச அல்மாழூ காப்புறுதிக் கம்பனி**
203ஏ, ஹை லெவல் வீதி,
கொழும்பு-06 ✆ : 2768428

**11. வரை. ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி**
46, முத்தையா வீதி,
கொழும்பு-02. ✆ : 2309999

**12. வரை. தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
24, ஸ்ரேபிள்ஸ் வீதி,
கொழும்பு-02. ✆ : 2328260

**13. வரை. சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி,**
4ஆவது மாடி, சிலிங்கோ இல்லம்,
69, சனாதிபதி வீதி,
கொழும்பு-01. ✆ : 2485705

**14. வரை. புறூடென்சியல் அசூறன்ஸ் லங்கா**
றான்சிற் கோட்,
21, நவம் ஒழுங்கை,
கொழும்பு-02. ✆ : 2303560

**15. வரை. யூனியன் அசூறன்ஸ்**
20, சாந்த மைக்கேல் வீதி,
கொழும்பு-03 ✆ : 2428750

*ஆதாரம் - இலங்கைக் காப்புறுதிச் சபை*

*குறிப்பு - இவற்றை விட பல காப்புறுதித் தரகு நிறுவனங்களும் உள்ளன. இவைபற்றிய விபரங்கள் அடுத்த இதழில் இடம்பெறும்.

# காப்புறுதி நிறுவனங்கள், அமைப்புகட்கான வேண்டுகோள்!

மானிட மற்றும் இயற்கை அனர்த்தங்கள் மலிந்துவரும் இந்நாளில் மனித வாழ்வு பயத்துடனும் நிச்சயமற்ற தன்மையுடனும் கூடியதாக ஆகிவருகின்றது. திடீரென குடும்பத்தலைவர்களை அல்லது குடும்ப அங்கத்தவர்களை இழப்பவர்கள் அநாதைகளாகி அநாதை அகதிச் சமூகம் பெருகிவருகின்றது. எதிர்பாராது நிகழும் இவ்வகை அனர்த்தங்களினின்றும் மக்களை பாதுகாக்க வல்லதோர் - நல்லதோர் வழிமுறையாக காப்புறுதி முறை இருந்த போதிலும் இதுபற்றி தெரியாத - புரியாத பலர் இருப்பதை நாம் காணமுடிகிறது. எனவே இத்துறை வளர்ச்சிக்கென இத்துறையில் காலடி வைத்துள்ள இத்துறைசார் நிறுவனங்களும் அமைப்புக்களும் காப்புறுதி பற்றி மக்கட்கு அறிவூட்டும் பணியில் காலடி பதித்துள்ள 'காப்புறுதி உலகம்' எனும் சஞ்சிகைக்கு பல வழிகளில் உதவிடலாம். உங்கள் உதவி உங்கள் பணியை இலகுவாக்கவும் உங்கள் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையும் என்பதில் உங்கட்கே சந்தேகமில்லை. இருப்பினும் உதவிடத் தயக்கமேன்? நாம் தமிழில் மட்டும் இச்சஞ்சிகை பிரசுரிப்பது பற்றி 14 நிறுவனங்கட்கும் அறிவித்திருந்தோம். உடனும் மூன்று நிறுவனங்கள் மட்டுமே பதிலிறுத்தன. ஆக்கமும் ஊக்கமும் தருவதாக உறுதியளித்தன. அவற்றுக்கு முதற்கண் நன்றி. காலப்போக்கில் ஏனைய நிறுவனங்களும் ஒத்துழைப்பை வழங்கும் என எதிர்பார்க்கின்றோம்.

எனவே இப்பணி சிறந்திட உங்கள் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் அவசியம். இதனால்....... நாம் இந்நாட்டில் காப்புறுதித் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், அமைப்புக்களிடம்,

(1) உங்களின் அமைப்பு, பணிகள் பற்றி மக்கட்கு அறிவூட்ட உதவும் தகவல்களை,
(2) காப்புறுதி பற்றிய கட்டுரைகளை,
(3) விளம்பரங்களை,
(4) முக்கிய புகைப்படங்கள் என்பவற்றை ஒழுங்காகத் தந்துதவுமாறு இத்தால் கோருகின்றோம்.

இவ்வண்ணம்,
தங்கள் நல் உதவியை நாடும்
ஆசிரியர்
'காப்புறுதி உலகம்'
30ஏ, பெரேய்ரா ஒழுங்கை, கொழும்பு - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி இடையேற்பாட்டாளர்கள்

பேட்டி - 

## இவருக்கு நிகரில்லை



(இலங்கையில் நீண்டகாலம் காப்புறுதி இடையேற்பாட்டாளராகப் பணிபுரிந்து நாட்டின் ஜனாதிபதிகளிடமிருந்தும் பதக்கங்கள், பாராட்டுதல்கள் பெற்ற **திரு.க. வேலும்மயிலும் (க.வே)** என்பவரை 'காப்புறுதி உலகம்' சார்பில் இனியவன் பேட்டி காண்கின்றார்.)

**இனியவன் :-** பெரியவரே வணக்கம்

**திரு. க. வேலும்மயிலும் :-** வணக்கம்!

**இ:-** நீங்கள் எவ்வளவு காலமாக இக்காப்புறுதித் துறையில் பணியாற்றுகிறீர்கள்?

**க.வே:-** நான் இந்தக் காப்புறுதித் துறையில் 56 வருடங்களாகச் சேவை செய்கின்றேன்.

**இ:-** நீங்கள் இக்காப்புறுதித் தொழிலை எப்பொழுது ஆரம்பித்தீர்கள்?

**க.வே:-** நான் 09.04.1949ல் இத்தொழிலில் காலடி எடுத்து வைத்தேன். நான் விரும்பி இத்துறையில் பணியாற்ற வரவில்லை. ஏனெனில் அந்த நேரத்தில் காப்புறுதியால் கிடைக்கக் கூடிய வருமானம் மற்றும் நன்மைகள் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நெருங்கிய ஆசிரிய நண்பரொருவரின் வற்புறுத்தலால்தான் இத்துறைக்குள் புகவேண்டி ஏற்பட்டது. அந்த நண்பர் ஏற்கனவே இத்துறையில் பணியாற்றி நல்ல அனுபவமுள்ளவர்; நல்ல வருமானமும் ஈட்டியவர். தற்சமயம் அவர் இவ்வுலகில் இல்லை. அவருடைய மகன் ஒருவர் ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (இலங்கை) கொழும்புக் கிளையில் பெரிய பதவி ஒன்றை ஏற்றுப் பணியாற்றி வருகின்றார். அந்த ஆசிரிய நண்பர் எனக்கு இப்படியான ஒரு நல்ல துறையில் வழிகாட்டியதை நான் என்றென்றும் மறக்க முடியாது. அன்றியும் எனது ஆயுள் உள்ளவரை அவருக்கு நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

நான் 09.04.1949ல் காப்புறுதித் துறையில் முதன் முதலாக ஆரம்பித்துப் பணியாற்றிய ஸ்தாபனம் வரையறுக்கப்பட்ட கீழைத்தேய அரசாங்க பாதுகாப்பு ஆயுட் பாதுகாப்புக் காப்புறுதிக் கம்பனி (Oriental Government Security Life Insurance Company Ltd) என்பதாகும். சில காலங்களின் பின் இது ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (L.I.C) என்ற ஸ்தாபனமானது. இந்த ஸ்தாபனம் 31.12.1956ல் சில அரசியல் காரணங்களால் இலங்கையில் தொழில் செய்வதை நிறுத்திவிட்டது. இந்த ஸ்தாபனத்தில் அநேகமாக முதலிடத்தில் எனது சேவை இருந்ததால் இலங்கையில் உள்ள பல காப்புறுதி ஸ்தாபனங்களிடம் இருந்தும் எனக்கு அழைப்புகள் வந்தன. நான் கனடா சூரிய ஆயுள் (Sun Life of Canada) என்ற ஸ்தாபனத்தைத் தேர்ந்தெடுத்து 01.01.1957 தொடக்கம் பணி பார்த்தேன். இதில் எட்டு மாதங்கள் மட்டும் பணியாற்றினேன். இக்குறுகிய காலத்துள் பல பரிசுகள் பெற்றேன். 31.08.1957ல் சில நிர்வாகச் சிக்கல் காரணமாக இலங்கையில் காப்புறுதித் தொழிலை நிறுத்திவிட்டனர். பின்பு நான் தெரிவு செய்து பணிபுரியத் தொடங்கிய ஸ்தாபனம் அவுஸ்திரேலிய தேசிய பரஸ்பரம் (National Mutual of Australasia Ltd) இதில் 01.09.1957 தொடக்கம் 31.12.1961 வரையில் பணியாற்றினேன். இங்கேயும் நல்ல சேவை செய்து முதலிடத்தில் பலமுறை வந்ததால் பல பரிசுகள் பெற்றேன். இந்த சமயத்தில் இலங்கை அரசாங்கம் காப்புறுதித் தொழிலை 01.01.1962 தொடக்கம் செய்வதற்குத் தீர்மானித்தது. அதனால் சகல காப்புறுதி ஸ்தாபனங்களும் இலங்கையில் இத்தொழிலை நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் நான் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு விண்ணப்பித்தேன். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினேன். முன்பு பணியாற்றிய 3 காப்புறுதி ஸ்தாபனங்களிலும் எனக்குக் கிடைத்த பரிசுகள், நற்சான்றிதழ்கள் எல்லாவற்றின் விபரங்களையும் சமர்ப்பித்தேன். நேர்முகப் பரீட்சையில் 31.01.1961ல் முதலாவது அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். பருத்தித்துறைத் தொகுதிக்கு அமைப்பாளராக யாழ்ப்பாணக் கிளையுடன் இணைந்து 01.01.1962 தொடக்கம் பணியாற்றினேன். தற்சமயம் கொழும்புக் கிளையுடன் இணைந்து பணியாற்றுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ:- இதற்கு முன்னர்...**

**க.வே:-** இதற்கு முன்னர் ஒரு ஆசிரியனாகப் பணியாற்றினேன். முக்கியமாகக் கணிதபாட ஆசிரியனாகப் பணிபுரிந்தேன்.

**இ:- காப்புறுதித் துறையில் முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ கடமையாற்றுகின்றீர்கள்?**

**க.வே:-** ஆரம்பத்தில் 7 ஆண்டுகள் பகுதிநேர வேலையாகவும் பின்பு 49 ஆண்டுகள் முழுநேர வேலையாகவும் கடமையாற்றி வருகின்றேன்.

**இ:- முன்னைய தொழிலை விட்டுவிட்டு நிரந்தரமாகவே இத்துறையில் ஈடுபட உங்களை ஊக்கப்படுத்திய காரணிகள் எவை என்று கூறுவீர்களா?**

**க.வே:-** ஒரே காலத்தில் 7 ஆண்டுகளாக இரண்டு தொழில்களையும் செய்து வந்த பொழுது காப்புறுதித் துறையில் பலவிதமான நன்மைகளை உணரக் கூடியதாயிருந்தது.

1) சுதந்திரமாக இயங்கக் கூடியதாயிருந்தது.
2) எமக்கு மேலதிகாரிகள் கிடையாது.
3) இஷ்டமான நேரங்களில் கடமைசெய்யலாம்.
4) இஷ்டமான சமயங்களில் ஓய்வெடுக்கலாம்.
5) சொந்தக் காரியங்களை நன்கு கவனிக்கலாம்.
6) வருமானத்தில் ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு எதிர்பாராத அளவு முன்னேற்றம் கிடைத்தது.
7) ஆசிரியத் தொழிலில் ஒரு மாதத்தில் கிடைத்த வருமானம் காப்புறுதித் துறையில் ஒரு மணித்தியாலத்தில் கிடைத்தது.

**இ:- இதுவரை நீங்கள் எத்தனை பேரை காப்புறுதி செய்ய வைத்துள்ளீர்கள்?**

**க.வே:-** கிட்டத்தட்ட 20,000 பேருக்கு மேற்பட்ட தொகையினர் எமக் கூடாகக் காப்புறுதி பெற்றுள்ளார்கள்.

**இ:- பெரும்பாலும் ஆயுட் காப்புறுதியையா அல்லது பொதுக் காப்புறுதியையா நீங்கள் செய்ய வைப்பது?**

**க.வே:-** நான் பெரும்பாலும் ஆயுட் காப்புறுதியைத்தான் செய்ய வைப்பேன். ஏனெனில் பொதுக் காப்புறுதி செய்யாமல் ஏற்படும் இழப்பீட்டை ஓரளவு தாங்கிக் கொள்ளலாம். ஆனால் ஆயுட் காப்புறுதி செய்யாமல் ஏற்படும் இழப்பீட்டைத் தாங்கிக் கொள்ள இயலாது.

**இ:- உங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுட் காப்புறுதிகளுள் ஆகக் கூடிய காப்புறுதித் தொகை என்ன?**

**க.வே:-** இரண்டு கோடி ரூபா.

**இ:- எல்லோருமே தங்கள் உயிர் உடைமைகளையெல்லாம் காப்புறுதி செய்யவேண்டும் என்று கருதுகிறீர்களா?**

**க.வே:-** விவேகமுள்ள ஒவ்வொரு மனிதனும் நிச்சயமாகச் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் காப்புறுதி என்பதை அகில உலகமுமே ஏற்றுக்கொண்டுள்ளது.

**இ:- ஏன் இப்படிக் கூறுகிறீர்கள். காப்புறுதி செய்வதால் அப்படி என்னதான் பெரும் நன்மைகள் கிடைக்கும்?**

**க.வே:-** மனிதனின் வாழ்க்கையில் உயிர், உடைமைகள், வாகனம், வீடு வீட்டுத் தளபாடங்கள் எனப் பல வகையான இழப்புக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. இப்படியான சந்தர்ப்பங்கள் ஏற்படும் பொழுது காப்புறுதியே முன் வந்து கைகொடுத்து உதவுகின்றது.

**இ:- ஆயுட் காப்புறுதிகளிலும் பலவகையுண்டு என நினைக்கின்றோம். உங்கள் அறிவு அனுபவத்தைப் பொறுத்தவரை எது அதிக நன்மை வழங்கக்கூடிய ஆயுட் காப்புறுதி?**

**க.வே:-** நாற்பதுக்கு மேற்பட்ட வகையான காப்புறுதிகள் இருக்கின்றன. ஆனால் எனது 56 வருட அனுபவத்தில் மக்களைக் கவரக்கூடிய நன்மை பயக்கக் கூடிய காப்புறுதி ஒன்று உள்ளது என்பதைக் கூற விரும்புகின்றேன். அதுதான் மூன்று கட்ட ஆயுட் காப்புறுதி (THREE STAGE ASSURANCE).

**இ:- ஏன் இப்படிக் கூறுகின்றீர்கள்?**

**க.வே:-** உதாரணமாக ஒருவர் இக் காப்புறுதி ஒன்றை 50 இலட்சத்துக்கு எடுத்திருக் கின்றார் என்று வைத்துக் கொள்ளுவோம். காலம் 15 வருடங்கள். 5 வருடங்கள் பூர்த்தியானவுடன் 10 இலட்சம் ரூபா அவர் எதிர்பார்க்காமல் தானாகவே வீட்டுக்கு வந்துசேரும். இந்தப் பத்து இலட்சம் ரூபாவையும் வங்கியில் வைப்பிலிட்டால் அதற்குரிய வட்டி வளர்ந்துகொண்டு போகும். அடுத்து, அடுத்த 5 வருடங்கள் பூர்த்தியானவுடன் இன்னொரு 10 இலட்சம் ரூபா வீட்டுக்கு வந்து சேரும். இரண்டு தடவையும் 20 இலட்சம் கிடைத்த பின்பும் காப்புறுதியின் பெறுமதி அதாவது இதன் இடர்ப்பெறுமதி (RISK) 50 இலட்சம் ரூபா வாகவே இருக்கும். மூன்றாவது தடவை மீதி 30 இலட்சமும் இலாபங்கும் கிடைக்கும். இவ்வாறு மூன்று முறை பணம் கிடைக்கிறது. அத்தியாவசியமான தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

**இ:- நீங்கள் எந்தக் காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்றுகின்றீர்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.வே:-** நான் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணி புரிகின்றேன். 42 வருடங்களாக. எனது ஆரம்பம் ஆயுள் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் (LIC), பின்பு கனடா சூரிய ஆயுள் (SUN LIFE OF CANADA) பின்னர் அவுஸ்ராலேசியா தேசீய பரஸ்பரம் (NATIONAL MUTUAL OF AUSTRALASIA).

**இ:- நீங்கள் இந்தத் துறையில் ஈடுபட்ட காலத்திலிருந்து இன்று வரை இத்தொழில் காரணமாக அதிக சந்தோசமடைந்த சந்தர்ப்பங்கள் ஒன்றிரண்டைக் கூறுவீர்களா?**

**க.வே:-** நான் மிகுந்த பெருமையுடன் சந்தோசமடைந்த சந்தர்ப்பங்கள் பல உண்டு. அவற்றுள் மிகமிக முக்கியமானவை இலங்கையின் சனாதிபதிகள் திரு. விஜயதுங்க, திரு. பிரேமதாச, திருமதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்கா ஆகியோர் எனக்கு இலங்கையின் முதலாவது அமைப்பாளராக வந்தமைக்காகக் கைலாகு கொடுத்துத் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்த நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

**இ:- உங்களால் மறக்க முடியாத அனுபவங்கள் சிலவற்றை விளக்குவீர்களா?**

**க.வே:-** 1) இலங்கையின் சகல ஜனாதிபதிகளிடமிருந்தும் பரிசுகள் பெற்றுக் கௌரவிக்கப்பட்டதை மறக்க முடியாது.

2) கொழும்பில் ஒரு வீட்டிலே இரண்டு கோடி (2,00,00000 ரூபா) ரூபாவுக்கு ஆயுட் காப்புறுதி செய்ய வைத்துள்ளேன். இதையும் ஒருபோதும் மறக்க முடியாது.

**இ:- உங்கள் மூலம் காப்புறுதி பெற்றவர்கள் உங்களுக்கு நன்றி கூறியுள்ளார்களா?**

**க.வே:-** ஆம், பெரும்பாலானவர்கள் நன்றி கூறியுள்ளார்கள்.

**இ:- உங்களுக்கு இத்தொழில் பண ரீதியாக நல்ல திருப்தியைத் தந்துள்ளதா?**

**க.வே:-** எனக்குப் போதும் என்ற அளவுக்குப் பணவசதி இத் தொழிலால் கிடைத்துள்ளது.

**இ:- நீங்கள் இத்தொழில் மூலம் தேடிய தேட்டங்கள் பற்றி...**

**க.வே:-** முதலாவது பெரிய தேட்டம் எனது பிள்ளைகள் யாவருக்கும் சர்வகலாசாலையிலும் லண்டன், அமெரிக்கா முதலான இடங்களிலும் உயர் கல்வி கொடுத்து டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும் வரச்செய்தமை. இது தவிர நல்ல பெரிய வசதியான வீடு கார் என்பவற்றுடன் முதல் தரமான வாழ்க்கை வாழக்கூடிய நிலைமை கிடைத்தது.

**இ:- உங்கள் மாத வருமானம் ஒரு இலட்சம் ரூபாவைத் தாண்டியிருந்ததா?**

**க.வே:-** சில சில மாதங்களில் ஒரு இலட்சம் ரூபாவைத் தாண்டியிருக்கின்றது. ஆனால் எனக்குக் கீழ் வேலைசெய்யும் முகவர் ஒருவருக்குச் சில சில மாதங்களில் வருமானம் இரண்டு இலட்சம் ரூபாவையும் தாண்டியுள்ளது.

**இ:- உங்களின் கீழ் எவ்வளவு பேர் பணிபுரிந்துள்ளார்கள்?**

**க.வே:-** 300 பேர்வரையில் பணி புரிந்துள்ளனர்.

**இ:- அவர்களில் சிலர் பற்றிக் கூறுவீர்களா?**

**க.வே:-** 1) ஒரு மிக மிகக் கஷ்டமான நிலைமையில் இருந்த ஒருவருக்கு நான் பல விதமான பண உதவி உட்பட எத்தனையோ உதவிகள் செய்து மாதவருமானம் 100 ரூபா கூட இல்லாதவரை மாத வருமானம் 50,000, 60,000 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறத்தக்கதாய் ஆக்கினேன். எனக்குத் தெரியாமல் இரகசியமாக அமைப்பாளர் பதவியும் பெற்றுக்கொண்டார். அவருக்கு வெளிநாட்டு மோகம் இருந்ததால் இத்தொழிலில் சேகரித்த பணத்தின் உதவியால் லண்டனுக்குப் போய் அங்கே ஏதோ சிறு தொழில் செய்கின்றார். பெயர் குறிப்பிடவிரும்பவில்லை. செய் நன்றி அணுவளவும் அவரிடம் கிடைக்காது. அவர் வாழ்க்கையில் முன்னேற மாட்டார்.

2) இன்னொருவர் எனக்குக் கீழ் 5 வருடமாக வேலைசெய்கின்றார். இளைப்பாறிய வங்கி முகாமையாளர். செய்நன்றியுள்ளவர். பத்து இலட்சம் ரூபா வருமானமுள்ளவர். தற்சமயம் அமைப்பாளராக உயர்ச்சி பெற்றுள்ளார். குரு பக்தியுள்ளவர். இவரது பெயர் திரு. கே.பீ. சாமி (K.P. SAMY).

**இ:- நீங்கள் இந்நாட்டில் படித்துவிட்டு வேலையற்றவர்கள் என இருப்பவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**க.வே:-** சும்மா வேலையில்லை என்று இருக்காமல் ஏதாவது சிறு சிறு சுயமுயற்சிகளை ஆரம்பிக்கலாம். காப்புறுதித் தொழிலில் ஈடுபடலாம். ஆனால் காப்புறுதித் தொழில் அவ்வளவு ஒரு இலகுவான தொழில் அல்ல இதை எல்லாரும் செய்ய இயலாது. இதற்கெனச் சில தகுதிகள் தேவை.

**இ:- உங்கள் குடும்பம் பற்றி....**

**க.வே:-** எங்கள் குடும்பம் பெரிய குடும்பம். உலகமெங்கும் பரந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்கின்றார்கள். நன்கு படித்து நல்ல பொருளாதாரத்துடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள்.

இ:- உலகம் சுற்றும் வாலிபனாக இருந்துள்ளீர்கள். நீங்கள் எந்தெந்த நாடுகட்கெல்லாம் சென்றிருக்கிறீர்கள்.

க.வே:- உலகத்தின் கிழக்குப் பகுதிகளுக்கு அதிகம் செல்லவில்லை. கொங்கொங், தாய்லாந்து ஆகியவற்றுக்குச் சென்றுள்ளேன். உலகின் மேற்கு நாடுகள் பலவற்றுக்குச் சென்றுள்ளேன். அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க், லண்டன், அயர்லண்ட், ஸ்கொட்லண்ட் முதலான இடங்களுக்கும் சென்றுள்ளேன். பாகிஸ்தானின் கராச்சி, கட்டார் முதலான இடங்களுக்கும் சென்றுள்ளேன்.

இ:- ஓட்டுமொத்தத்தில் இத்துறையில் நீங்கள் பூரண திருப்தியடைந்துள்ளீர்கள். இத்தொழில்மூலம் வாழ்வில் பெரும் சந்தோசங்களை அடைந்துள்ளீர்கள். அப்படித்தானே.

க.வே:- ஆமாம். 100 வீதம் அப்படித்தான்.

இ:- அது எப்படி கொஞ்சம் விபரமாக..

க.வே:- சாதாரணமாக வாழ்க்கையை ஆரம்பித்த எனக்கு இவ்வளவு செல்வம், அந்தஸ்து என்பன கிடைக்கும் என நான் என்றுமே நினைத்திருக்கவில்லை. இவ்வளவு நிலைமைகள் ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்கள் எது

1) இறை நம்பிக்கை,
2) நேர்மை,
3) முயற்சி என்பன


இம் மூன்றுமே சாதாரண ஆங்கில அறிவுடன் இவ்வளவு நிலைமைகள் கிடைத்துள்ளன. சர்வகலாசாலைக் கல்வி பெற்றிருந்தால் எனது நிலைமைகள் இன்னும் அதிகமாகவோ படிகள் உயர்ந்திருக்கும்.

இ:- இறுதியாக இதுவரை காப்புறுதி செய்யாதவர்கட்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

க.வே:- விவேகம் பொதுஅறிவு இல்லாதவர்கட்கு அறிவுரை கூறப்போவது நேரத்தை வீணாக்குவதாகும்.
[illegible] காப்புறுதியின் அருமையைப் புரிந்து பலரும் காப்புறுதி செய்வதே நல்லது.

இ. நன்றி, வணக்கம்.

க.வே. நன்றி. வணக்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதித் துறையினர் அறிமுகம்

## திரு.சி.ப இராஜரட்ணம்



(இப்பகுதியில், இந்நாட்டில் காப்புறுதித் துறையில் கால் பதித்து முன்னேறும் கலைஞர்களை பற்றி எழுதப்படும். நீங்களும் இத்துறையில் பிரகாசிப்பவராயின் உங்கள் புகைப்படத்துடன் விபரங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும். தகுந்தவை பிரசுரிக்கப்படும். இம்முறை கண்டியைச் சேர்ந்த திரு. சி.ப. இராஜரட்ணம் அறிமுகமாகிறார்.)

பார்வைக்கு இனிமையானவர்; சாந்தமானவர்; செயற்றிறன் மிக்கவர்; நேர்மையானவர்களுடன் அவர்களது நேர்மைக்குப் பங்கமே பாதிப்போ இல்லாதவாறு பழகும் திறமையுடையவர்.


இவர் 1976ஆம் ஆண்டில் கண்டிப் பிரதேசத்துக்கான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி முகவராக தன் சேவையை ஆரம்பித்தார். பதுளை ஊவாக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் 1987ல் காப்புறுதி அமைப்பாளராக உயர்வடைந்தார். அகில இலங்கை ரீதியில் புதிய காப்புறுதிக் தொழிற் பெருக்கல் போட்டியில் கண்டி மாவட்டத்தில் தொடர்ந்து நான்கு தடவைகள் முதலாவது இடத்தைப் பெற்ற பெருமை இவருக்குண்டு. 1993இல் முன்னாள் ஜனாதிபதி டீ.பி. விஜேதுங்கவிடம் இருந்து முதலாம் பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். நிர்வாகம், ஒழுங்கமைப்பு, பிறரை அணுகும் முறை என்பவற்றில் திறமை வாய்ந்த திரு. இராஜரட்ணம் இப்பொழுது கண்டியில் இத் துறையில் பிரகாசித்து வரும் பிரீமியர் காப்புறுதித் தரகு நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவராக உள்ளார். அகில இலங்கை சமாதான நீதவானுமான இவர் அண்மையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தினால் சிங்கப்பூரில் ஏற்பாடு செய்யப்பட்ட காப்புறுதி பற்றிய கருத்தரங்கிலும் கலந்து கொண்டுள்ளார்.

இத்துறையிலான இவரது முயற்சி மேன்மேலும் சிறக்கவும் பலருக்கு இவரது சேவை கிடைக்கப் பெறவும் இவர்களது பிரீமியர் காப்புறுதித் தரகு நிறுவனம் உயர்ச்சி பெறவும் "காப்புறுதி உலகம்" சஞ்சிகை வாழ்த்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காப்புறுதியில் உங்கள் பிரச்சினை

அன்புள்ள வாசகர்களே!

ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு விடயத்திலும் பலருக்கு விளங்காத-புரியாத விடயங்கள் பல இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு விடயத்திலும் அவ்விடயம் தொடர்பாக ஆழ்ந்த அறிவும் அனுபவமும் கொண்டவர்களும் இருக்கின்றார்கள். இவர்களால் குறிப்பிட்ட அந்த விடயத்தை விளங்கிக்கொள்ளவும் பிறருக்கு விளங்க வைக்கவும் முடியும். உதாரணமாக கல்லீரல் தொடர்பான நோயுள்ள ஒருவர் கல்லீரல் நோய் நிபுணரை நாடுவதை நாம் காண்கின்றோம். எவ்வாறு வைத்தியத்துறை சார்ந்த ஒவ்வோர் விடயங்கட்கும் அவ்விடயத்தில் கைதேர்ந்த பல வைத்தியர்களும், வைத்திய நிபுணர்களும் இருக்கின்றார்களோ அவ்வாறே வர்த்தகம், கல்வி, அரசியல், வரலாறு, மொழி எனப் பல வகைப்பட்ட துறைகளைச் சார்ந்த வல்லுநர்களும் உள்ளனர். காப்புறுதித் துறையும் இத்தகையதோர் துறையே. எவ்வாறு மருத்துவத்துறை மக்கள் யாவர்க்கும் முக்கியமானதோ அவ்வாறே காப்புறுதித் துறையும் மக்களின் நல்வாழ்வுக்கு மிக முக்கியமானதோர் துறையெனக் கொள்ளவேண்டும். எனவே இப்பகுதியூடாக காப்புறுதி செய்தல், ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதிகள் மற்றும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளைப் பெறுதல் வேறும் காப்புறுதி தொடர்பான பிரச்சினைகள் யாவற்றுக்கும் 'காப்புறுதி ஆலோசகர்' பதிலளிப்பார்.

ஆகவே காப்புறுதி சம்பந்தமாக உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் எங்களுக்கு எழுதுங்கள்... உதாரணமாக ஒருவர் காப்புறுதியை எங்கே பெறலாம் எனக் கேட்காலாம். இதற்கு நாம் தரும் பதில் யாதெனில் நீங்கள் பெறவிரும்பும் காப்புறுதியை வழங்கக் கூடிய இச்சஞ்சிகையின் 26ஆம் 27ஆம் பக்கங்களில் தரப்பட்ட காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது காப்புறுதித் தரகு நிறுவனம், அல்லது காப்புறுதி முகவர், காப்புறுதி அமைப்பாளர், காப்புறுதி விற்பனைப் பிரதிநிதிகள் போன்றோர் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம் என்பதாகும். உங்கள் காப்புறுதிப் பத்திர இலக்கத்தையும் காப்புறுதி நிறுவனத்தின் பெயரையும் குறிப்பிட மறந்துவிடாதீர்கள். நீங்கள் எழுதி அனுப்பவேண்டிய முகவரி-

'ஆசிரியர்'
காப்புறுதி உலகம்
30ஏ, பெரேய்ரா ஒழுங்கை,
கொழும்பு - 06.
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# க.பொ.த. (உ.த.) வினா விடை

(விசேடமாக க.பொ.த.ப.(உ.த) மாணவர்களுக்கானது)

**1. கேள்வி - இலங்கையில் காப்புறுதிச் சேவையின் அண்மைக்கால போக்குகளை விளக்குக?**

1) அரச காப்புறுதி நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டமை.
2) போட்டித் தன்மை அதிகரிப்பு.
3) காப்புறுதி நிறுவனங்களின் கிளைகளின் விரிவாக்கம்.
4) புதிய விசேட பரந்த நன்மைகளைக் கொண்ட காப்புறுதி வகைகளின் அறிமுகம்.
5) இழப்பீடு வழங்கும் முறையில் இலகு தன்மை.
6) சில வர்த்தக வங்கிகளுடான காப்புறுதிச் சேவை.
7) காப்புறுதிக் கைத்தொழிற் சட்ட அறிமுகம்.
8) காப்புறுதிச் சபை நிறுவப்பட்டமை.
9) காப்புறுதித் தரகு நிறுவனங்கள் தொழிலிலீடுபட அனுமதிக்கப்பட்டமை.
10) காப்புறுதித் தரகு நிறுவனங்கள், வெளிக்கள உத்தியோகத்தர்களின் தகைமைகள், நியமனங்களில் கட்டுப்பாடுகள்.

**ஈ.செல்வநாயகம்**
பீகொம்,(ஸ்பெசல்) டிப். இன் எட்.

# மாணவருக்கான பொது அறிவுப் போட்டி

1) இலங்கைக்கு 1505 இல் போர்த்துக்கேயர் வரும்போது சுதந்திரமான 3 இராச்சியங்கள் இருந்தன. அவற்றின் பெயர்களை எழுதுக?
2) புவியியலாளர்கள் இலங்கையை தரைத்தோற்ற அடிப்படையில் 3 பிரிவாக பிரிப்பார்கள். அவற்றின் பெயர்களைக் கூறுக?
3) முன்னர் ஒன்றாக இருந்த தமிழினம் மதமாற்றம் மூலம் மத அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கப் பார்க்கின்றது. அம்மதங்களின் பெயர்களைத் தருக?
4) இலங்கை முழுவதும் அந்நியரின் பூரண கட்டுப்பாட்டில் வந்தது எந்த ஆண்டில்?
5) கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர் வெல்லும்போது இதனை ஆண்ட மன்னனின் பெயர் என்ன?
6) கடந்த மார்கழி மாதம் இலங்கையை தாக்கிய ஆழ்கடற்பேரலை (சுனாமி) காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட 3 மாவட்டங்களைத் தருக?
7) இலங்கையின் இன்றைய சட்டமா அதிபரின் பெயர் என்ன?
8) இலங்கையில் பிரதம நீதியரசாராக பதவி வகித்த தமிழர் ஒருவரின் பெயரைக் கூறுக?
9) இலங்கையின் இன்றைய பிரதம நீதியரசரின் பெயரைக் கூறுக?
10) மனிதன் தனது ஆயுளைக் காப்புறுதி செய்யும்போது காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும் பத்திரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(39ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள்

## வாசகர் பார்வை

அன்பார்ந்த வாசகர்களே! நீங்களே எங்கள் எஜமானர்கள்; வழி காட்டிகள்; எங்களை ஊக்குவிப்பவர்கள். எனவே ஆழிப் பேரலையின் கோரத் தாண்டவம்; அதன் கடும் பாதிப்புக்கள்; அவைபற்றிய நினைவலைகள் கடல் அலைகள் போல் உங்கள் நெஞ்சங்களில் இன்னுமின்னும் நிழலாடும்போது இயற்கை அனர்த்தங்கள் மட்டுமல்ல எதிர்பாராத விதத்தில் ஏற்படும் இடர்களினாலும் இறந்தவர் போக எஞ்சியவர்களாவது தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டாமா? பாதுகாப்பான வழிகளுள் காப்புறுதியும் ஒன்று என்பதை இக் காப்புறுதி உலகத்தை ஒருமுறை பார்த்துவிட்ட நீங்கள் நம்புவதுடன் இதுபற்றி எதையாவது கூறவேண்டும் போல் இருக்கும். இல்லையா? எனவே எங்கள் ஆக்கங்கள் பற்றி உங்கள் பார்வையை எழுத்தில் வடித்து எமக்கு அனுப்பி வையுங்கள். அடுத்த இதழில் உங்கள் பார்வையும் இடம்பெறும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-
'ஆசிரியர்'
காப்புறுதி உலகம்
30ஏ, பெரேய்ரா ஒழுங்கை,
கொழும்பு - 06.

## கைகொடுக்கும் காப்புறுதி

தேடிய தேட்டம் எல்லாம்
ஓடியே செலவு செய்தாய்
நாடி வந்த காப்புறுதியை
வீணிலே ஒதுக்கிவிட்டாய்
பாழ்பட்ட வருத்தமதை
போக்கிட தேட்டம் இல்லை
காப்புறுதி செய்திருந்தால்
உனக்கது கை கொடுக்கும்
விறுமாப்பு பேசிய நீ
வீழ்பட்டு நிற்கிறாய்
உற்ற துணையும் உருமாறி நிற்கின்றாள்
பெற்ற பிள்ளைகளும் ஆதரவற்ற நிலை
ஆகவே
காப்புறுதி செய்து காத்திடுவாய்
செழிப்புடனே வாழ்ந்திடுவாய் - **தம்பு சிவா**

---

## காப்புறுதி - இதுபற்றி

# இவர்கள் என்னதான் கூறுகின்றார்கள்?

காப்புறுதி என்பது வளமான வாழ்வுக்கு வழிகோலுவது என்பது பலரது கருத்து. அதுவும் அண்மைய ஆழ்கடற் பேரலையின் தாக்கத்தின் பின் பலரும் காப்புறுதி மிகமிக அவசியம் எனச் சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டனர். இச்சந்தர்ப்பத்தில் இக்காப்புறுதி பற்றி முன்னர் இங்கிலாந்தின் பிரதமராகவிருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் என்பவர் கூறியதை முதலில் உங்கள் கவனத்துக்குத் தருகின்றோம்.

> *"எனக்கு வசதி இருந்திருப்பின் ஒவ்வொரு வீட்டின் கதவிலும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் 'காப்புறுதி செய்' என்ற வாசகத்தை எழுதியிருப்பேன். ஏனெனில் சிறுசிறு தியாகங்களைச் செய்வதன் மூலம் நிரந்தர அழிவை ஏற்படுத்தக்கூடிய பேராபத்திலிருந்து குடும்பங்களையும் சொத்துக்களையும் காப்பாற்ற முடியும் என்பதில் நம்பிக்கை உள்ளவன் நான்"*
>
> ***- வின்செண்ட் சேர்ச்சில்***

எனவே இதுபற்றி வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் பலரை நாம் பேட்டிகண்டோம். அவர்கள் என்னதான் கூறுகின்றார்கள். கொஞ்சம் படித்துப் பாருங்களேன். படிப்பதுடன் நின்றுவிடாது நீங்களும் எழுதலாம். எழுதுவதுடன் உங்கள் புகைப்படங்களையும் (முத்திரையளவிலான) அனுப்புங்கள். தகுந்தவற்றை இப்பகுதியில் பிரசுரிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதராகப் பிறந்த நாம் யாவரும் வாழ்ந்து வாழவேண்டும். பிறருக்கு தீங்கு செய்வதை நம் சமயங்கள் ஆதரிப்பதில்லை. துயரங்களை எதிர்க்க - தணிக்க எவ்வளவோ முயலுகின்றபோதும் கூட இயற்கை அனர்த்தங்கள் மூலம் பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் மனித சமுதாயத்துக்கு ஏற்படுத்துகின்றன. எதிர்காலத்தில் எது நடந்தாலும் நாம் சமய ஒழுக்கமுறையும் வாழ்வியல் அறிவாலும் எம்மைப் பாதுகாக்கலாம், வளர்த்துக் கொள்ளலாம். மனித அழிவிலும் பொருள் அழிவிலும் அவை காப்புறுதி செய்யப்பட்டு இருந்தால் ஏற்பட்ட நட்டத்தை உரியவர்கள் காப்புறுதி மூலம் பெற்றுக்கொள்ளலாம். எனவே, நெருக்கடி மிகுந்த இன்றைய காலத்தில் எமது சமயத்தின் நல்லொழுக்கங்களைப் பின்பற்றுவதுடன் எமது உயிர் உடைமைகளை எல்லாம் காப்புறுதி செய்து நிம்மதியுடனும் பயமின்றியும் வாழ வேண்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

-பிரம்மஸ்ரீ ஜெ.நாகராஜக்குருக்கள், கிரியா சூடாமணி, ஆகம சூடாமணி, அ.இ.ச.கி.
புதிய கதிரேசன் ஆலய பிரதமகுரு
கொழும்பு - 04.



மோட்டார் போக்குவரத்துச் சட்டம் காப்புறுதி செய்யப்படாத மோட்டார் வாகனங்கள் தெருவை வீதியில் ஓடமுடியாதென காப்புறுதியைக் கட்டாயப்படுத்தியுள்ளது. இதேபோல நாட்டில் உழைக்கும் யாவருக்கும் ஆயுட்காப்புறுதி கட்டாயம் என சட்டம் கொண்டு வரப்பட்டால் மிக மிக நல்லது. ஏனெனில் உழைப்பாளர்கள் அகால மரணமடைந்தால் அவர்களில் தங்கி வாழ்பவர்கட்கு காப்புறுதி கை கொடுக்குமே.

-திருமதி நளினி கணேசயோகன்,
சட்டத்தரணியும் பிரசித்தநொத்தாரிசும், கொழும்பு 06.



மனித வாழ்க்கை அர்த்தமானது. கவலைகள் நிறைந்தது. துன்பங்களும் இன்பங்களும் மனிதனைத் தேடி ஓடி வருகின்றன. இந்த இரண்டையும் சரிசமமாக நோக்கும் பக்குவம் ஒரு மனிதனுக்கு இலேசாக வரக்கூடிய தொன்றல்ல. துன்பங்கள் வருகின்ற போதெல்லாம் தளராது இருக்க வேண்டும். இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி என்ற தத்தளிப்பும் மோசடி, கஞ்சத்தனம் போன்றவை. இவற்றிலிருந்து மனிதன் விடுபடவேண்டும். இதற்கு தேவையானது காப்புறுதி. ஆத்மசுகமான காப்புறுதியைத்தேட முன்னர் வாழ்க்கையை நிதானமாக ஓட்டக்கூடிய காப்புறுதியை நாம் பற்றிக் கொண்டால் நிம்மதியை மட்டுமல்லாமல் மன நிறைவையும் அவதிகளிலிருந்து விடுபடும் வழியையும் கூட தேடிக்கொள்ளலாம்.

கலாசூரி ஆ.சி. சிவநேசச்செல்வன்
எம்.ஏ (இலங்கை), எம்.பில்.
பிரதிப்பணிப்பாளர், ஊடக வள நிலையம்
இலங்கை பத்திரிகை நிறுவனம், கொழும்பு - 07.



"எதிர்காலத்தில் நிச்சயமாக அல்லது நிச்சயமற்ற சம்பவங்களினால் ஏற்படக்கூடிய நஷ்டங்களைப் பண அடிப்படையில் ஈடுசெய்ய காப்புறுதி செய்பவருக்கும் காப்புறுதி அளிப்பவருக்கும் இடையில் உருவாகக் கூடிய ஒரு இணக்கம் காப்புறுதி ஆகும். இந்த வகையில் கடந்த மார்கழி மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி தாக்கத்தினால் எம் நாட்டு மக்கள் பல்வேறு அபாயங்களையும் நஷ்டங்களையும் இழப்புகளையும் எதிர்கொண்டு செய்வதறியாது திகைப்புற்ற வேளையில் இவ்விழப்புக்களுக்கு கைகொடுக்கும் முகமாக பல காப்புறுதி நிறுவனங்கள் முன்வந்தன.

எனவே இதன் பின்னராவது எம் மக்கள் காப்புறுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தங்களது ஆயுளையோ, சொத்துக்களையோ காப்புறுதி செய்ய முன்வருவதன் மூலம் தங்கள் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கையுடன் கட்டியெழுப்பச் செய்யலாம். காப்புறுதி செய்வோம்! கவலையை மறப்போம்."

**திருமதி. ச. ம. கைலீஸ்வரநாதன்** [illegible]
அதிபர், கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதனது வாழ்க்கை என்பது நிச்சயமற்றது. மேடு பள்ளங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. வீட்டை விட்டு வெளியேறுகின்றபோது நாம் எதிர்பார்த்த எதிர்பார்ப்புக்களை அடைய முடியுமோ என்று கூட சொல்ல முடியாத நிலை உள்ளது. உலகளாவிய ரீதியில் ஏற்படும் வன்முறைகள், புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் கொடிய நோய்கள் என்பன கூட எமது வாழ்க்கையை கேள்விக் குறியாக்குகின்றன. அத்துடன் தற்போது பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப வாகனங்களின் தொகையும் அதிகரிப்பதால் வாகன நெரிசல்கள் ஏற்பட்டு விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலைகளில் எமது வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மைகளை ஓரளவேனும் நிச்சயமாக்கிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. எமது கஷ்டங்கள் ஏற்படும் போது கூட அக்காலத்தில் எம்மைக் காப்பாற்றிக் கொள்ள / உதவ காப்புறுதி பெரிதும் உதவுகின்றது. காப்புறுதி என்பது ஒருவகையில் எமது ஆபத்து வேளைகளில் உதவுவது மட்டுமல்ல எமது ஒரு சேமிப்பாகவும் அமைகின்றது.

**த.முத்துக்குமாரசுவாமி பீ.ஏ., டிப் இன் எட், எம்.பில் எட்.**
அதிபர், இந்துக்கல்லூரி, கொழும்பு - 04.



இத்தாலி நாட்டில் தோன்றி இங்கிலாந்தில் உயர் கொடியாக வளர்க்கப்பட்டு இன்று உலகெங்கும் வியாபித்துள்ளதே காப்புறுதித் தொழில். இது இலாபமீட்டும் வணிகமாகவே நடைபெற்றிருக்கும் என்ற போதிலும் விஞ்ஞான வளர்ச்சியில் இக்காப்புறுதியின் பங்கு மிக முக்கியமானதாகும். இழப்புக்களைக் கண்டு அங்கலாய்த்தவர் இழப்பீட்டை எவ்வாறு ஈடு கொடுப்பது என சிந்தித்ததே புத்திசாலித்தனமானதாகும். இச் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் செயற்படும் நிறுவனங்களே காப்புறுதி நிறுவனங்கள். எனவே காப்புறுதி பற்றிச் சிந்தித்து ஏதேனும் ஒரு காப்புறுதி நிறுவனத்தில் உங்கள் உயிர் உடைமைகளைக் காப்புறுதி செய்து பாதுகாப்பாக வாழ்வோமாக.

**திருமதி க. மனோகரன் பீ.ஏ (சிறப்பு)**
பிரதித் தலைவி, நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி.



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ஆனால் நோயில்லாமல் எல்லோரும் வாழ்நாளில் ஒருமுறையேனும் வைத்தியரை நாடாமல் இருப்பவர்கள் எம்மில் எத்தனைபேர்? பொதுவாகப் பெண்கள் விசேடமாக திருமணமான பெண்கள் கர்ப்பச்சிதைவு, அதிகளவு இரத்தப்போக்கு, அறுவைச்சிகிச்சைப் பிரசவம் (சிசேரியன்), கர்ப்பப்பைக் கட்டிகள், கர்ப்பப்பைப்புற்றுநோய் போன்ற பல நோய்கள் காரணமாக மருத்துவ நிபுணரை நாட வேண்டியே உள்ளது. மருத்துவ சேவைகள் மலைபோல அதிகரித்துச் செல்லும் இன்றைய காலத்தில் மருத்துவக் காப்புறுதியைப் பெற்றிருந்தால் நாம் வைத்தியசாலைக்காக செலவு செய்யும் பணத்தினை மீளப்பெற்றுக் கொள்ளலாம். பணப்பிரச்சினை காரணமாக சிகிச்சை பெறாமல் இருக்கும் நிலைமையும் தவிர்த்துக்கொள்ளலாம். எனவே ஒவ்வொருவரும் கட்டாயம் பெறவேண்டிய காப்புறுதிகளுள் மருத்துவக் காப்புறுதியும் ஒன்றாகும்."

**டாக்டர் மு.கு.சிறீஸ்கந்தராஜா எம்பிபிஎஸ், எம்எஸ்சிஓஜி**
மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர்
டி சொய்சா மருத்துவமனை, கொழும்பு - 08.



தினம் தினம் இடம்பெறும் நல்லவை கெட்டவை அனைத்தையுமே அறியும் சந்தர்ப்பங்கள் ஊடகத்துறையினருக்கு நிறையவே உண்டு. உலகின் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு அனர்த்தம் தினம் தினம் இடம்பெற்றுக் கொண்டேயிருக்கின்றது. எனினும் இவ் அனர்த்தங்களால் ஏற்படும் சேதங்கள் இழப்புக்கள் என்பவற்றுக்கான நட்டஈட்டைப் பெறும் சிறந்ததோர் வழிமுறையையும் நாம் அறிந்துள்ளோம். அது தான் காப்புறுதி. மக்களை பாதுகாப்பாக - நலமாக வாழ வழிகாட்டும் பணியில் ஊடகத் துறையினராகிய எமக்கும் பெரும் பங்குண்டு. எனவே, நாம் ஒவ்வொருவரும் எம் உயிர் உடைமைகளையெல்லாம் காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்து நலமாக வாழ்வது நமக்கும் நாம் வாழும் சமுதாயத்திற்கும் நல்லது.

**திரு. வீ. தனபாலசிங்கம்**
பிரதம ஆசிரியர், தினக்குரல், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நாம் யாவரும் வாழ்வதற்கென்று குறிப்பிட்ட காலமே இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட காலத்தில் நாம் மகிழ்ச்சியுடன் வாழ்வதே யாவருக்கும் நலம். ஆனால் எதிர்பாராதவிதமாக ஆழிப்பேரலை போன்ற இடர்கள் வரும்போது நாம் எப்படி எம்மையும் எம் பொருட்களையும் காப்பது? மீட்பது? இருக்கவே இருக்கிறது சிறந்ததோர் வழி. அதுதான் காப்புறுதி. ஆம். எமது உயிர் உடைமைகளையெல்லாம் வேளாவேளைக்கு காப்புறுதி செய்வதே நலம். மக்களும் பாதுகாப்புறும். நாம் இல்லாத போது எமது குடும்பமும் எமது குழந்தைகளும் பாதுகாப்பாக வாழ இக்காப்புறுதி வழிவகுக்கும்.

**திரு. சௌ. குணாளன் இரத்தினபாண்டியன்**

கம்பனி உரிமையாளர், தலைவர், நியூ நிமா இண்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டட்.



நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்க்கையில் மனிதராகிய நாம் எத்தனையோ விதமான இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எதிர்பாராத விதமாக ஏற்படும் அனர்த்தங்களால் எமது உயிர் உடைமைகளுக்கு சேதமோ அழிவோ ஏற்படலாம். உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் மக்களின் பெரும்பாலானோர் காப்புறுதி செய்துள்ளதையே நாம் காண்கிறோம். காப்புறுதி மூலம் எதிர்வரும் அழிவுக்கும் சேதத்துக்கும் உரிய நட்டஈட்டைப் பெறலாம். எனவே ஒவ்வொருவரும் காப்புறுதியைப் பற்றி நன்கறிந்து உரிய காப்புறுதிகளை செய்து நலமாக வாழ்வது நமக்கும், நாம் வாழும் சமுதாயத்துக்கும் நலமாகும்.

**சி. ஜெனிரா, பி.கொம். (சிறப்பு), பீ.ஜீ.டிப்.இன்.எட்., எச்.என்.டி.ஏ.**

பட்டதாரி ஆசிரியை

இரத்மலானை இந்துக்கல்லூரி.



காப்புறுதி மக்கள் வாழ்வினை வளம்படுத்தும் ஒரு சக்தியாய் உள்ளது. காப்புறுதி செய்வதானால் அதனை திட்டமிட்டு முன்கூட்டியே செய்தல் வேண்டும். இதன் பயனை வெளிப்படையாக தேவைக்காலத்தில் காண முடியும். வெளிநாடுகளில் இதன் பயன்பாடானது மிக மிக அதிகம். நம் நாட்டில் இப்போது மிக்க தேவையானதாக உள்ளது. எமது வாழ்வில் காப்புறுதி மூலம் பயனடைந்தது மிகவும் பொருத்தமானதாக அமைந்ததைக் குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றேன்.

**பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங்**

உரிமையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு 11



தற்கால உலகில் மனித வாழ்வின் அவசிய தேவையாக காப்புறுதி காணப்படுகின்றது. ஆயுட்காப்புறுதி சேமிப்பாக அமைவதோடு அதேநேரம் இலாபங்கள் போனஸ் வடிவில் வட்டியும் அன்பளிப்பும் கொண்டு அமைந்துள்ளது. வியாபாரிகள் அச்சமின்றி முதலீடுகளை மேற்கொள்ள காப்புறுதி வழிவகுக்கின்றது. உடைமைகளுக்கு காப்புறுதி செய்வதன் மூலம் இயற்கை அனர்த்தங்கள், களவு, தீ போன்றவற்றால் ஏற்படும் இழப்பீடுகளுக்கும் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. மோட்டார் விபத்தில் மூன்றாம் நபர் உயிர் உடைமைக்கு பாதிப்பு ஏற்படின் இழப்பீட்டைப் பெறமுடியும். எதிர்கால வாழ்வை நிம்மதியாக அச்சமின்றி வாழ காப்புறுதி துணை புரிகிறது. காப்புறுதியை பெற்று பயன் பெறுவோமாக.

-திருமதி வி. கணேசன், பீ.கொம் (சிறப்பு), டிப்.இன்.எட்.

பட்டதாரி ஆசிரியை.

சைவமங்கையர் கழகம், கொழும்பு - 06



"தங்கம் காப்புறுதியைப் போன்றது என அண்மையில் உலக தங்க தொழிற்சங்கத் தலைவர் கூறியிருக்கின்றார். எனவே காப்புறுதியிலும் தங்கத்திலும் உங்கள் அயராத உழைப்பால் சேர்த்த பணத்தைச் சேமித்து சிறப்பாக வாழ எங்கள் வாழ்த்துக்கள்."

**திரு. பெ. கந்தசாமி**

உரிமையாளர் - ஸ்ரீ லேகா நகைமாளிகை, கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்வேறு விளையாட்டுக்கள் மற்றும் கராத்தே, மல்யுத்தம், குத்துச்சண்டை போன்ற தற்பாதுகாப்புக் கலை போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு உடலாரோக்கியம் சிறப்பாக அமையும் அதேவேளை எதிர்பாராத ஆபத்துகட்கு உள்ளாகும் அபாயமும் உண்டு என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். எனவே இத்துறையில் ஈடுபடுபவர்கள் மட்டுமல்ல மனிதர் யாவருக்கும் எதிர்பாராத காயங்கட்கு உள்ளாகும் நிலையுண்டு. எனவே உடல் உயிர் உடைமைகளை காப்புறுதி செய்துவிட்டால் யாவரும் மனநிம்மதியுடனும் வாழலாம் என்றே நான் கருதுகின்றேன்.

கராத்தேக்கலைக் கலாநிதி
**மாஸ்டர் ஆ. ராஜகுரு**
சர்வதேச காபா போர் நிறுவனம்,
கொழும்பு - 09.



காப்புறுதி செய்யப்பட்ட காலத்திலேபோது நோய்களுக்கான மருத்துவ செலவு, விபத்து ஏற்படல் சேதமடைதல், இறப்பால் பணநட்டம் மற்றும் இயலாமை என்பது ஏற்படலாம். இவ்வேளைகளிலெல்லாம் உங்கள் பல இழப்புகளை ஈடுசெய்து உற்ற நண்பன் போல் உதவக் கூடியது காப்புறுதி மட்டுமே.

**சி.நி.மறவராயர்**
காப்புறுதி ஆலோசகர்
கொழும்பு - 04



காப்புறுதி என்பது ஒரு தலை சிறந்த முதலீடு என்றும் கருத்தில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. எதிர்பாராமல் ஏற்படும் அழிவுகளிலிருந்தும் பொருளாதார அல்லலையும் பாதுகாக்கும் வல்லமை காப்புறுதிக்கு உண்டு என்று கூறுதல் மிகையாகாது. கடந்த ஆண்டில் ஆழிப்பேரலையின் தாக்கங்களை அடுத்து தற்பொழுது காப்புறுதி பற்றிய மக்களின் மனோபாவங்கள் பெரிதும் மாறியுள்ளன. எனவே காப்புறுதி நிறுவனங்கள் யாவும் மக்கள் யாவரும் காப்புறுதி பற்றி அறிய ஆவன செய்வதுடன் மக்களும் இது பற்றி அறிந்து காப்புறுதி மூலம் தங்கள் வாழ்க்கையை பாதுகாப்பது நல்லது.

**கு.சிவபெருமான் ரெட்டி**
உரிமையாளர், சுரேந்திரா தேயிலைத் தொழிற்சாலை,
பன்விலதலவ.

34ம் பக்க தொடர்ச்சி

விடைகளை அனுப்பும்போது இக் கூப்பனையும் சேர்த்து அனுப்பவும் விடைகளை 28.02.2006க்கு முன்னர் ஆசிரியர் காப்புறுதி உலகம், 38/1, பெரியார் ஒழுங்கை, கொழும்பு - 06 என்னும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சரியான விடையெழுதி வெற்றியீட்டும் மாணவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

## காப்புறுதி உலகம்
## மாணவர்க்கான பொதுஅறிவுப் போட்டி

மாணவர் பெயர்:
பாடசாலை :
வகுப்பு :

.................................
அதிபரின் கையொப்பம்

# கட்டுரைப் போட்டி

வாசகர்களிடையே அவர்கள் தத்தம் கருத்துக்களை எடுத்துரைக்க உற்சாகப்படுத்தவும் வாய்ப்பளிக்கவும் கருதி நாம் தொடர்ந்து வெவ்வேறு தலைப்புக்களில் கட்டுரைப்போட்டியை நடாத்தவிருக்கின்றோம். அடுத்த இதழில் பரிசுக்குரியோர் பற்றிய விபரங்கள் இடம்பெறும். எனவே எமது முதலாவது கட்டுரைப்போட்டி தொடர்பான விபரங்களை கீழே தருகின்றோம். படித்துப்பாருங்கள்! பங்குபற்றுங்கள்!! பரிசுகளைப் பெறுங்கள்!!!

## கட்டுரைப் போட்டி - 01

**தலைப்பு - எங்கள் கிராமத்துப் பிரச்சினை - இயற்கை அனர்த்தம்**

எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

கட்டுரையில் 2000 வரையான சொற்கள் இடம்பெறலாம்..

அனுப்பவேண்டிய இறுதித் திகதி 28.02.2006

பரிசுகள் - 1ம் பரிசு - ரூ. 3000/-
2ம் பரிசு - ரூ. 2000/-
3ம் பரிசு - ரூ. 1000/-

(குறிப்பு: தட்டச்சுச் செய்யப்பட்ட பிரதிகள் நடுவர்கட்கு தீர்ப்பு வழங்க உதவியாக இருக்கும்.)

அனுப்பவேண்டிய முகவரி-

'ஆசிரியர்'
காப்புறுதி உலகம்
30ஏ, பெரேய்ரா ஒழுங்கை,
கொழும்பு - 06.
இலங்கை.

---

# காப்புறுதிப் பரிசுப் போட்டி

வாசகர்களிடையே காப்புறுதி பற்றிய அறிவை வளர்க்கும் நோக்குடன் இப்பரிசுப் போட்டி தொடர்ந்து நடாத்தப்படும். எனவே இதில் பங்குபற்றுபவர்கள் கீழ்க்காணும் கேள்விக்கு உரிய விடையை கீழ்க்காணும் கூப்பனில் நிரப்பி எமக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்வி :- **இலங்கையில் ஆயுட் காப்புறுதித் தொழில் தேசியமயமாக்கப்பட்டது எந்த ஆண்டில்?**

**காப்புறுதி உலகம் - காப்புறுதிப் பரிசுப் போட்டி - 01**

ஆசிரியர்,
காப்புறுதி உலகம்
30ஏ, பெரேய்ரா ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.

விடை :-..........................................................................................................................................

பெயர் :-..........................................................................................................................................

விலாசம் :-......................................................................................................................................

இத்தால் மேற்படி போட்டிக்கான எனது விடையை அனுப்புகின்றேன்.

இவ்வண்ணம்
அன்புடன்

ஒப்பம்:- ........................................................

அனுப்பவேண்டிய இறுதித் திகதி 28.02.2006.

பரிசுகள் : சரியான விடையெழுதி அனுப்பும் மூன்று அதிஷ்டசாலிகட்கு 1000 ரூபா வீதம் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்

சகலவிதமான

பொதி செய்தல்


பொருட்களுக்கும்

நீங்கள்

நாடவேண்டிய

இடம்









# நியூ ஜீவா இண்டஸ்றீஸ்

(பிறைவேட்) லிமிடட்

71, காசல் ஹில் வீதி, கண்டி, இலங்கை

தொலைபேசி: 0094-81-2222530

தொலைநகல்: 0094-81-2233312


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் காப்புறுதித் தேவைகளையெல்லாம்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள
இதோ ஒரு புதிய நிறுவனம்



புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் எழில் பொங்கும்
மலையகத்தின் அழகு மாநகர் கண்டியில்

# பிறிலியன்ஸ் காப்புறுதி புரோக்கர்ஸ் கம்பனி (பிறைவேட்) லிமிடட்

2ஆம் மாடி,
47, இராஜ வீதி,
கண்டி.
தொலைபேசி/தொலைநகல்: 081-4473209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org